

DINGHY BRAND

COPAL VARNISH

'டிங்கி' பிராண்ட் வார்னிஷ்
உறுதியாகவும் நல்ல பளபளப்
புடனும் சீக்கிரமாக உலர்கிறது.

SHALIMAR PAINT

COLOUR & VARNISH CO. LTD.,
POST BOX 136, MADRAS

Agents Carrying Stocks

Darragh, Smail & Co., Ltd., ...	Alleppey
Peirce Leslie & Co., Ltd. of Calicut, Cochin, Coimbatore	
Lewis Brown & Co., Ltd., ...	Colombo

SPK-19-TM


சுவை
நிரம்பியது
சுலபமாய்
ஜீரணமா
கிறது
சுத்தமானது
விடமின்
அடங்கியது
DALDA
VANASPATI
டால்டாவில் வறுத்த பூரிகள்
வாயில் கரையுகின்றன—மேலும்
ஊக்கத்தையும் அளிக்கின்றன!
டால்டா உங்கள் தின்பண்டங்களை ருசியுள்ளதாகச் செய்யும் வஸ்து மட்டுமன்று—அதுவே ஊக்கமளிக்கும் உணவு! எளிதில் ஜீரணமாகக் கூடினதும், விடமின் நிரம்பியதுமான இச் சமையல்செய்ய உதவும் சாதனத்தின் அறிந்த சத்தையளிக்கும் திறமையைக் கொண்டு உங்கள் தினந்தோறுமுள்ள சாப்பாட்டைச் சீர்படுத்திக் கொள்ளுங்கள். டால்டா ஒவ்வொரு ஸ்திரீக்கும் ஒரு நன்கொடை—அது அவர் தயாரிக்கும் சாதாரண தின்பண்டங்களுக்கு விசேஷச் சுவையை யளிப்பதோடு அவர் குடும்பத்திற்கு அதிகப்படியான ஊக்கத்தையும் கொடுக்கிறது.
* ஆங்கிலத்தில் மட்டும் எழுதப்பட்டுள்ள டால்டா சமையல் புத்தகத்தின் உதவியுடன் உங்கள் சாப்பாட்டுத் திட்டத்தை அமையுங்கள். சத்தைத் தரும் திறமைக்கென ஆராய்ந்தெடுத்த சுவையுள்ள 150-க்கு மேற்பட்ட இந்தியத் தின்பண்டங்களின் பக்குவம் செய்யும் முறைகள் இதில் அடங்கியிருக்கின்றன. உங்கள் புத்தகத்திற்கு Dept. A461 P.O. Box No. 353, Bombay, என்ற விலாசத்திற்கு அணா ஸ்டாம்பு அனுப்புங்கள்.
HVM. 48-23 TM
THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD.

கல்கி

பொருளடக்கம்

மலர் 6	1946 டிசம்பர் 15	விய ௵
இதழ் 20		கார்த்திகை 30

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

இந்திய சுதந்திரப் போருக்கு இரண்டாம் போர்முனை உண்டென்றால் அது லண்டனிலுள்ள இந்தியா லீக்தான். இந்தியா லீக் ஸ்தாபிதமாவதற்கு முக்கிய காரணமானவரும், அதன் பொதுக் காரியதரிசியுமான ஸ்ரீ வி. கே. கிருஷ்ண மேனனைத்தான் பண்டித ஜவாஹர்லால் நேரு தம்முடைய சொந்த அயல் நாட்டுத் தூதராக நியமித்துக் கொண்டிருக்கிறார். ஸ்ரீ கிருஷ்ண மேனன் மலையாளத்தில் பிறந்தவர். தேசத்தின் விடுதலைக்காகத் தளராத ஊக்கத்துடனும் உறுதியுடனும் நின்று பாடுபடுகிறவர். பிரம்மசரிய வாழ்க்கை நடத்துபவர். பால்ய வயதில் அடையாறு பிரம்மஞான சமாஜத்தில் சேர்ந்து காலஞ் சென்ற டாக்டர் அருண்டேலுடன் இருந்து தூயவாழ்க்கை நடத்தப் பயின்றவர்.



1920-ம் ஆண்டில் சட்டப் படிப்புக்காக லண்டனுக்குச் சென்றார். அங்கே அவர் மனம் படிப்பில் நாடவில்லை. பிரிட்டிஷ் காரர்களுக்கு, இந்தியா சுதந்திரம் அடைய வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்தும் பொருட்டு இந்தியா லீக் ஸ்தாபனத்தை ஆரம்பித்துத் தாய் நாட்டுக்காக உழைப்பதில் ஈடுபட்டார்.

இந்தச் சமயத்தில் அதிர்ஷ்டவசமாக கிருஷ்ணமேனனுக்கு லண்டனில் நேருஜியுடன் பரிச்சயம் ஏற்பட்டது. பிறகு பண்டித ஜவாஹருக்கும் கிருஷ்ண மேனனுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. இந்தியா லீக்கின் செல்வாக்கும் வெகு சீக்கிரத்தில் பிரபல்ய மடைந்தது. பிரிட்டிஷ் மந்திரி சபையில் தொழிற் கட்சி அதிகாரத்துக்கு வந்ததும் இந்தியா லீக்கின் செல்வாக்கு இன்னும் அதிகமாயிற்று.

ஸ்ரீ கிருஷ்ண மேனனுடைய பெரு முயற்சி காரணமாக இன்று பிரிட்டிஷ் பார்லிமெண்டு தொழிற் கட்சி அங்கத்தினர்களில் முக்கால்வாசிப் பேருக்கு மேல் இந்தியா லீக்கின் அங்கத்தினராய்ச் சேர்ந்திருக்கிறார்கள்.

இப்படி யெல்லாம் தாய் நாட்டின் விடுதலைக்காக ஸ்ரீ கிருஷ்ண மேனன் இருபத்தைந்து ஆண்டுகளாகச் செய்து வரும் சேவை ஒப்பற்றது.

ஐக்கிய தேச அஸெம்பிளியில் இந்தியப் பிரதிநிதிகளின் தூதுகோஷ்டிக்குத் தலைவராகச் சென்றிருந்த சமயம், ஸ்ரீ மேனன் ருஷ்ய வெளிநாட்டு மந்திரி மாலடோவுடனும் மற்ற நாட்டுப் பிரதிநிதிகளுடனும் பேச்சு வார்த்தை நடத்தி, இந்தியாவுக்கு அனுகூலமான பல காரியங்களைச் சாதித்திருக்கிறார். சமீபத்தில் அவர் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தபோது பல இடங்களில் அவருக்கு அமோகமான வரவேற்பு அளிக்கப்பட்டது ஞாபகமிருக்கலாம்.

ரெக்ஸோனா

சரும அழகை உண்டாக்குகிறது
...சரும சுகத்தை பாதுகாப்பதன் மூலம்





ஆம், ஏனென்றால் ரெக்ஸோனா சுறுசுறுப்பாய் உற்சாகமூட்டிச் சரும சுகத்தைப் பாதுகாக்கிறது—சரும சுகத்திற்குச் சரும சௌந்தர்யமே உண்மையான அடிப்படை—சரும அழகைக் கொடுக்கும் பாத்தியதை தனக்கேயுண்டென்று ரெக்ஸோனா உண்மையாகச் சொல்லக்கூடும்.

இதை எப்படி ரெக்ஸோனா செய்கிறது? சரும வியாதியைப் போக்கும் கிருமி நாசினியாகிய *கேடில் என்னும் மருந்து அதிற் சேர்ந்திருப்பதால் அது அவ்வாறு செய்கிறது. சரும உபத்திரவங்களும், சரும மாசுமறுக்களும் அடிக்கடி அதிகமாய் உண்டாகும் இடங்களுக்கும்—சருமத்தின் ஒவ்வொரு அடிப்பாகத்திற்கும்—சுகமளித்துச் சுத்தம்செய்கிற கேடில் என்னும் மருந்தை ரெக்ஸோனாவின் விரைவில் உண்டாகும் நுரை கொண்டுபோய்ச் சேர்க்கும் சக்திவாய்ந்தது.


ரெக்ஸோனா, குடும்ப சோப்

அழகான, பசுமைவாய்ந்த, விரைவில் நுரையைத் தரும் இந்த சிறந்த ஒப்பற்ற சோப்பின் குணங்களைக் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் புகழ்ந்து கூறுவார்கள். . . சரும அழகைத்தர அது அதிக சிறந்த சக்திவாய்ந்திருப்பதால் ஸ்திரீகள். . . ஆரோக்யமான சருமத்தின் அவசியத்தை எல்லா ஜனங்களும் அறிந்திருப்பதால் மனிதர்கள் . . . குழந்தைகளுக்கு இதைக் காட்டிலும் சிறந்த பாதுகாப்புடைய சோப் வேறு இல்லை மருந்திடப்பட்ட ரெக்ஸோனாவின் நுரை உடலெரிச்சலைச் சாந்தப்படுத்துகிறது. ரணங்களை ஆற்றிக் காப்பாற்றுகிறது—குழந்தையின் சருமத்தைக் குளிர்ச்சியாகவும், சுகமுடையதாகவும் செய்கிறது சரும சுகம் நிச்சயமாக ஏற்படக் குடும்பம் முழுவதும் ரெக்ஸோனாவை ஒழுங்காய் உபயோகிக்க வேண்டும்.



★ரெக்ஸோனாவிலுள்ள கேடில் கிருமி நாசினியாகிய ஒரு ஒப்பற்ற கலப்பு மருந்து. சரும சுகத்திற்கு அதிக சக்திவாய்ந்தது; குணமளித்துப் போஷிக்கும் தைலம் சேர்ந்தது. சுகத்தையளித்துக் காப்பாற்றும் தன்மையுள்ள கேடில் யாவராலும் மதிக்கப்பட்டு, விஞ்ஞானிகளால் பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது.

ரெக்ஸோனா ஆயின்ட்மென்டை உபயோகியுங்கள். வெட்டுக் காயங்கள், புண்கள், கட்டிகள், கரப்பான் ரணங்கள், முகப்பருக்கள், அரிப்புகள், சிரைப்புகள், கடிகள், மச்ச மறுக்கள் முதலிய எல்லா சரும வியாதிகளுக்கும் ரெக்ஸோனா ஆயின்ட்மென்டை உபயோகியுங்கள்.



R.P. 29-23-40 TM

REXONA PROPRIETARY LIMITED

கல்கி

மலர் 6 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 20

என்ன சேதி?

அங்கும் இங்கும்

துணிக் கஷ்டத்தைப் போக்குவதற்கு என்ன செய்வதென்று தெரியாமல் ரேஷனை ஐந்து கெஜமாகக் குறைத்துக் கொண்டு சென்னை சர்க்கார் அவதிப்படும்போது, ஐக்கிய மாகாண சர்க்கார் மேற்படி துணிப் பஞ்சத்தைப் போக்குவதற்காக என்ன செய்யப் போகிறார்கள் என்பது மிகவும் ரஸமாக இருக்கிறது.

ஐக்கிய மாகாணம் என்று சொல்லும் போது, இந்தியா தேசப் படத்தில் மேற்படி ஐக்கிய மாகாணம் இருக்கும் இடத்தை மாத்திரம் நேயர்கள் மனதிற்குள் நினைத்துப் பார்த்துக் கொள்ளாமல், இந்திய சுதந்திரப் போராட்டத்தில் மேற்படி மாகாணத்துக்கு எவ்வளவு சிறப்பான ஸ்தானம் உண்டு என்பதையும் சிந்தித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும். அத்துடன், இன்று அந்த மாகாணத்துப் பிரதம மந்திரியாக விளங்கும் பண்டித கோவிந்த வல்லபபந்த் எப்பேர்ப்பட்டவர் என்பதையும் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அவர் காந்திஜிக்கு மிகவும் வேண்டியவர். இந்திய சுதந்திரப் போரிலே நிலை கரைந்துப் போனவர். ஒத்துழையாமைப் போராட்டத்தின்போதோ சைமன் கமிஷன் பகிஷ்காரத்தின் போதோ எலும்பு முறிந்து போனவர். அத்தகைய தேச பக்தரும் உண்மை ஊழியருமான ஸ்ரீ பந்த் தற்போதைய துணிப் பஞ்சத்தைப் போக்குவதற்காக என்ன செய்யப் போகிறார் என்பதை நம்முடைய மாகாண பிரதம மந்திரிக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

காந்திஜிக்கு மிகவும் பிடித்தமான கதர்த் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரப் போவதாகவோ அதன் மூலம் துணிப் பஞ்சத்தைப் போக்கப் போவதாகவோ அவர் சொல்லவில்லை. அதற்கு நேர் மாறாக, புதிதாகப் பல நெசவாலைகளை ஏற்படுத்தப் போகிறாராம்!

ஆனால், இங்கே நம்முடைய மாகாணத்திலோ, உற்பத்தியாகும் துணியையும் இந்தோனேஷியாவுக்கு அனுப்பி வைக்கத் தயாராக இருக்கிறார்கள் நம்முடைய மந்திரிகள்!

அப்பீல் இல்லை!

பாரத தேசம் முழுவதும் பூரித்துப் போகத்தக்க ஒரு முதல்தரமான அரசியல் வெற்றி சர்வதேச அரசியல் அரங்கத்தில் இந்தியாவுக்குக் கிடைத்திருக்கிறது.

சென்ற வாரம் ஐக்கிய தேச மகா சபையின் அரசியல்—சட்டக் கமிட்டி, தென் னாப்பிரிக்க இந்தியர் சம்பந்தமாக இந்தியா கொண்டு வந்த தீர்மானத்தை நிறைவேற்றியபோது, ஜெனரல் ஸ்மட்ஸ் கொஞ்சங் கூடப் பயப்படவோ கவலைப்படவோ இல்லை. "இந்தக் கோர்ட்டிலே போனாலும் ஹைகோர்ட் இருக்கவே இருக்கிறது. அங்கே ஒரு கை பார்த்துக் கொள்ளலாம்" என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டு போகும் கட்சிக்காரர்களைப் போல நிம்மதியாக இருந்தார். ஆனால், இப்போது அந்த 'ஹைகோர்ட்'டும் அவரைக் கைவிட்டு விட்டது. பிரான்ஸும் மெக்ஸிகோவும் இந்தியாவின் சார்பாகக் கொண்டு வந்த தீர்மானம் ஐக்கிய தேச மகாசபையின் பொதுச் சபையிலே மூன்றில் இரண்டு பங்கு வோட்டு மெஜாரிட்டியுடன் நிறைவேறியிருக்கிறது. இதற்கு மேல் அப்பீலும் இல்லை, கோர்ட்டும் இல்லை.

இத்தகைய மகத்தான வெற்றி இந்தியாவுக்குக் கிடைப்பதற்கு ருஷ்யா, சீனா, பிரான்ஸ் முதலிய நாடுகள் செய்த உதவியை—முக்கியமாக ருஷ்யா செய்த உதவியைக் குறிப்பிட வேண்டியது அவசியமாகும்.

பிரிட்டன் செய்த துரோகம்

ருஷ்யா செய்த உதவியைக் குறிப்பிடும்போது இதில் பிரிட்டன் இந்தியாவுக்குச் செய்த துரோகத்தையும் குறிப்பிட வேண்டியது ரொம்பவும் அவசியமாகும்.

மேற்படி விவகாரம் ஐக்கிய தேச மகா சபையில் விவாதத்திற்கு வந்த நாள் முதலாக, அதைச் சீர்குலைப்பதற்காக பிரிட்டன் செய்த முயற்சி கொஞ்ச நஞ்சமல்ல. பிரிட்டிஷ் பிரதிநிதியாகிய ஸர் ஹார்ட்லி ஷாகிராஸ் தென்னாப்பிரிக்காவுக்காக வக்காலத்து வாங்கிக் கொண்டு பேசியது மல்லாமல், இந்தியாவுக்கு விரோதமாகத் தாம் ஓட்டளித்தது மல்லாமல், மற்றவர்களையும் தென்னாப்பிரிக்காவுக்குச் சாதகமாக ஓட்டளிக்கும் படியாக வற்புறுத்தினார். ஓர வஞ்சகமும் நம்பிக்கைத் துரோகமும் மிகுந்த இத்தகைய பிரிட்டிஷ் காமன்வெல்த்தில்தான் சுதந்திர இந்தியா இருக்க வேண்டுமென்று பிரிட்டிஷ்காரர்கள் எல்லோரும் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். அத்தகைய விபத்து எதுவும் சேராமல் கடவுள்தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும்.

எழுத்தாளர் மகாநாடு

நாளது டிசம்பர் 14—15 தேதிகளில் சென்னையில் தமிழ் எழுத்தாளர் மகாநாடு கூடப்போகிறது என்பதை யறிந்து மிக்க மகிழ்ச்சி யடைகிறோம். மேற்படி மகாநாட்டைத் திறந்து வைக்க தமிழ் எழுத்தாளர்களின் நன்மதிப்புக்குப் பாத்திரமானவரான நாமக்கல் கவிஞர் ஸ்ரீ வெ. ராமலிங்கம் பிள்ளையவர்களையும், மகாநாட்டுக்குத் தலைமை வகிக்க கோவை ராமகிருஷ்ண வித்யாலயத்தின் தலைமையாசிரியரான ஸ்ரீ பெ. தூரன் (ம. பெ. பெரியசாமி) அவர்களையும் தேர்ந்தெடுத்ததிலிருந்தே மேற்படி மகாநாடு, கூடுவதற்கு முன்னாலேயே பாதி வெற்றியை அடைந்துவிட்டது என்று சொல்லலாம். தமிழ் எழுத்தாளர்கள் எல்லோரும் இந்த மகா நாட்டில் கலந்து கொண்டு மேற்படி பாதி வெற்றியைப் பரிபூரண வெற்றியாகச் செய்வார்களென்று எதிர்பார்க்கிறோம். அத்துடன் இந்த மகாநாடு தமிழ் எழுத்தாளர்களின் எதிர்கால நன்மைக்கான வழிகளைப் பற்றிச் சிந்தித்து வேண்டியன செய்யுமென்றும் கருதுகிறோம்.

அஸ்திவாரம் போடுகிறார்கள்!



இந்திய சுதந்திரமாகிய மகோந்நத மாளிகைக்கு நிரந்தரமான அஸ்திவாரம் அமைப்பதற்காக நாளது டிசம்பர் மாதம் 9-உ அன்று டில்லியில் ஆரம்பமான அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்தில் இருநூற்றுச் சொச்சம் ஜனப்பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிச் சித்திரம்



இருநூறு பிரம்மாக்கள்

ஆதி காலத்திலிருந்து டில்லிமா நகரத்தில் எத்தனையோ அதிசயங்கள் நடந்திருக்கின்றன. டில்லியிலும் அதற்கு அக்கம் பக்கத்திலும் எவ்வளவோ சாம்ராஜ்யங்கள் பிறந்திருக்கின்றன; அழிந்திருக்கின்றன. இந்தியா தேசத்தின் சரித்திரப் போக்கையே மாற்றி அமைக்கும்படியான பற்பல சம்பவங்கள் டில்லியிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் நிகழ்ந்திருக்கின்றன. பெரிய பெரிய யுத்தங்கள் நடந்திருக்கின்றன. மகத்தான மகுடாபிஷேகங்கள் நடைபெற்ற புராதன அரண்மனைகளை அந்த நகரில் இன்றைக்கும் புத்தப் புதிதாகவே காணலாம். மகாராஜ்யங்களை ஆண்ட பாதுஷாக்களும் பீகங்களும் புதையுண்டிருக்கும் பிரமிக்கத்தக்க மசூதிக் கட்டிடங்களையும் காணலாம்.

இவ்வாறு பழைய டில்லியிலும் அதைச் சுற்றிலும் முற்காலத்தில் நடந்திருக்கும் எல்லா சம்பவங்களையும் விட மகத்தான சம்பவம், — இந்தியாவின் சரித்திரப் போக்கையே மாற்றி அமைக்கும்படியான முக்கிய நிகழ்ச்சி, — நாளது டிசம்பர் 9உ யன்று புது டில்லி நகரில் நடைபெற்றது.

அன்றைய தினம் காலை 11 மணிக்கு அந்தப் புத்தப் புதிய நகரத்திலேயுள்ள மிக விசாலமான மண்டபத்தில் இருநூற்றுச் சொச்சம் பிரம்மாக்கள் ஒன்றாகக் கூடினார்கள்.

இந்தியாவில் இன்று வாழும் நாற்பது கோடி மக்களின் வாழ்வையும் இனி அவர்களுடைய சந்ததியில் வரப்போகும் எத்தனையோ தலைமுறைகளின் வாழ்வையும் நிர்ணயிப்பதற்காகவே அந்தப் பிரம்மாக்கள் அங்கே கூடினார்கள்.

இந்திய சுதந்திரமாகிய மகோந்நத மாளிகைக்கு நிரந்தரமான அஸ்திவாரம் அமைப்பதற்காக அந்த இருநூற்றுச் சொச்சம் பிரம்மாக்களும் அங்கே கூடி அவரவர்களுக் குரிய ஆசனங்களில் அமர்ந்தார்கள்.

இவ்விதமாக மேற்படி இருநூற்றுச் சொச்சம் பிரம்மாக்கள் ஒன்று கூடித் தொடங்கியிருக்கும் காரியமானது சரிவர நடைபெற்றுப் பூர்த்தி பெறும்போது, ''இதோ, இந்தியா தேசத்தின் வருங்கால ஆயிரம் வருஷத்து வாழ்வு நிர்ணயிக்கப்பட்டு விட்டது!'' என்று இந்திய மக்கள் நாற்பது கோடிப் பேரும் உலகம் முழுவதுமே ஒப்புக்கொள்ளும் என்பதில் சந்தேகமே இல்லை.

சமய சந்தர்ப்பங்களின் முக்கியத்தை முன்னிட்டு மேலே நாம் நடபுடலான தமிழ் நடையில் ஆர்ப்பாட்டமாக வர்ணித்திருக்கும் காரியத்தைச் சுருக்கமாக ஒரே வாக்கியத்திலும் சொல்லி விடலாம். அதாவது:—டிசம்பர் 9உ யன்று புது டில்லி நகரத்தில் அரசியல் நிர்ணய சபை ஆரம்பமாயிற்று.

* * *

அன்று சர்தார் வல்லபாய் படேல் ''வானம் இடிந்து விழுந்தாலும் பூமி வெடித்துப் பிளந்தாலும் டிசம்பர் 9உ. அரசியல் நிர்ணய சபை கூடியே தீரும்'' என்று அறைகூவினார் அல்லவா?

அதன்படியே அரசியல் நிர்ணய சபையானது குறிப்பிட்ட தேதி தவறாமல் கூடவே செய்தது.

ஆனால் அவ்விதம் குறிப்பிட்ட தேதி தவறாமல் கூடிய அரசியல் நிர்ணய சபைக்கு வந்திருக்க வேண்டியவர்கள் எல்லோரும் தவறாமல் வந்திருந்தார்களா என்று கேட்டால், ''வரவில்லை'' என்றுதான் வருத்தத்துடனே சொல்ல வேண்டியிருக்கிறது.

அப்படி வராமல் இருந்துவிட்ட பிரதிநிதிகளில் ஒரே ஒருவரைப் பற்றிக் குறை கூறிப் பிரயோஜனமில்லை.

ஏனெனில் அந்த ஒருவர் நாம் எவ்வளவு உரத்துச் சத்தம் போட்டுக் குறை கூறினாலும் நம் காதில் விழாத தூர தேசத்திற்கு யாத்திரை போய் விட்டார்!

அவருடைய ஆத்மா சாந்தி அடைய வேண்டுமென்று அரசியல் நிர்ணய

சபையின் முதல் நாள் கூட்டத்தில் ஒரு அநுதாபத் தீர்மானமும் நிறைவேறியது.

மேற்படி அஸ்ஸாம் பிரதிநிதியின் பரலோக யாத்திரையினால் ஏற்பட்ட காலி ஸ்தானத்தைத் தவிர இன்னும் பல ஸ்தானங்களும் ஆரம்ப தினத் தன்று காலியாகத்தான் இருந்தன. இதற்குக் காரணம் ஜனாப் ஜின்னா முஸ்லிம் லீக் பிரதிநிதிகளுக்கு விடுத்திருக்கும் பகிஷ்கார உத்தரவேயாகும்.

மேற்படியாரின் மேற்படி உத்தரவின்படி முஸ்லிம் லீக் பிரதிநிதிகள் அரசியல் நிர்ணய சபையின் முதல் கூட்டத்திற்கு வராமல் இருந்து விட்டார்கள்.

என்ன செய்யலாம்? அவர்கள் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்!

மேற்படி மகத்தான வைபவத்தில் முஸ்லிம் லீக் பிரதிநிதிகள் கலந்து கொள்ள முடியாமற் போனது இந்திய முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்பட்ட ஒரு பெரும் நஷ்டம் என்பதில் சந்தேகமே இல்லை.

*   *   *

அரசியல் நிர்ணய சபையின் ஆரம்பக் கூட்டத்தில் முஸ்லிம் லீக் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளும்படி செய்வதற்கு பிரிட்டிஷ் மந்திரிகள் கடைசி நிமிஷத்தில் செய்த முயற்சியைப் பற்றி நேயர்கள் அறிவார்கள்.

அரசியல் நிர்ணய சபையை ஒத்திப் போட வேண்டும் என்றும் இல்லாவிடில் அதற்கு நாங்கள் வரமாட்டோம் என்றும் சொல்லி ஜனாப் ஜின்னா மிகவும் எக்கச்சக்கமான நிலைமையில் அகப்பட்டுக் கொண்டார். அதிலிருந்து அவரை விடுதலை செய்ய வைஸராய் வேவலும் பிரிட்டிஷ் மந்திரிகளும் முன் வந்தார்கள்.




இந்திய அரசியல் நிர்ணய சபையின் நிரந்தர அக்கிராசனராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட டாக்டர் ராஜேந்திர பிரஸாத். அந்த பாரத்தைத் தாமது விசாலமான தோள்களில் காக்கக் கூடியவர்தான் என்பதைப் பார்த்தவுடன் தெரிந்து கொள்ளலாம். அவருக்கு இடதுபக்கம் நிற்பவர் டில்லியின் திறமையாகக் கலவரத்தை அடக்கி அமைதியை நிலைநாட்டிய டிபுடி கமிஷனர் ஸ்ரீ ரந்தவா.

சில காலத்திற்கு முன்னிருந்தே குவாதே ஆஜம் ஜின்னா, "பிரிட்டிஷார் என்னை அழைத்தால் நான் இங்கிலாந்துக்கும் போகத் தயாராயிருக்கிறேன்!" என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

எனவே பிரிட்டிஷ் மந்திரிகள் முஸ்லிம் லீக் பிரதிநிதிகளையும் காங்கிரஸ் பிரதிநிதிகளையும் ஆலோசனைக்காக லண்டனுக்கு அழைத்ததும், "நான் இதோ தயார்!" என்று தெரியப்படுத்தினார். அத்துடன் தம்முடைய பிடிவாதம் பூரண வெற்றியடைந்து விட்டதாகவே எண்ணிக் கொண்டு, "எல்லா விஷயங்களையும் அடியிலிருந்து புனராலோசனை செய்ய வேண்டும்" என்றும், "இந்தியப் பிரச்னையைத் தீர்க்கப் பாகிஸ்தான் ஒன்றுதான் வழி; வேறு வழியே யில்லை!" என்றும் முரசு கொட்டிக் கொண்டு கிளம்பினார். லண்டனிலும் மேற்படி கோஷங்களைப் பலமாகக் கிளப்பினார்.

மரியாதையை முன்னிட்டுக் காங்கிரஸ் பிரதிநிதியாக லண்டன் சென்ற பண்டித ஜவாஹர்லால்



இந்தியாவின் சுதந்திர அரசியல் திட்டத்தை நிர்ணயம் செய்வதற்காகக் கூடியிருக்கும் இருநூற்றுச் சொச்சம் ஜனப்பிரதிநிதிகள். (மண்டபச் சுவரில் இரண்டு பெரிய படச் சட்டங்கள் காலியாயிருப்பதைக் காணலாம். அவற்றுக்குள்ளே காட்சியளித்த மாஜி வைஸ்ராய்களின் படங்கள் எடுத்துவிடப்பட்டன.) போட்டோ:—ராமானுஜம்.

நேருவோ, ஒரு காலைத் தரையிலும் இன்னொரு காலைத் தாம் திரும்ப வேண்டிய ஆகாய விமானத்திலும் வைத்துக்கொண்டு, "டிசம்பர் 9வ. அரசியல் நிர்ணய சபையைக் கூட்டியே தீர வேண்டும். அவசரம்! அவசரம்! நான் போய் வரட்டுமா?" என்று கேட்டார். அப்படியே புறப்பட்டு விட்டார்.

பிரிட்டிஷ் மந்திரிகள் ஏதேதோ 'குயுக்தி' எல்லாம் செய்து பார்த்து விட்டு ஒன்றும் பலிக்காமல் கடைசியில் ஓர் அறிக்கை வெளியிட்டார்கள்.

அந்த அறிக்கையில் கண்ட விஷயம், "முன்னால் பார்த்தால் முதலியாரின் குதிரை; பின்னால் பார்த்தால் சாயபுவின் குதிரை!" என்று தென்னாலி ராமன் சொன்ன பிரசித்தமான சாட்சியத்தைப் போலவே அமைந்திருந்தது.

ஜனாப் ஜின்னா கோரியபடி மறுபடியும் இந்திய அரசியல் பிரச்னையை அடியிலிருந்து புனராலோசனை செய்ய பிரிட்டிஷ் மந்திரிகள் ஒத்துக் கொள்ளவில்லை. பாகிஸ்தானைத் தூக்கி அவர் கையில் கொடுத்து விடவும் இல்லை. ஜனாப் ஜின்னாவுக்காக அரசியல் நிர்ணய சபையின் தேதியைத் தள்ளிப் போடக்கூட அவர்கள் சம்மதிக்கவில்லை.

ஆனால் மேமீ 16வ. திட்டத்தில் சந்தேகத்துக்கும் விவாதத்துக்கும் இடமாயிருந்த விஷயத்தைப் பற்றி ஜனாப் ஜின்னாவுக்குச் சாதகமான அபிப்பிராயம் கொடுத்தார்கள்.

மேற்படி மேமீ 16வ. திட்டத்தில் மத்திய அரசாங்கத்துக்கும் மாகாண அரசாங்கத்துக்கும் நடுவில் பிரிசங்குத் தொகுதி அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தும் யோசனை இருந்ததல்லவா?

இந்தத் திரிசங்கு அரசாங்கத்தில் சேருவதற்கும் சேராம விருப்பதற்கும் மாகாணங்களுக்கு உரிமை உண்டு என்பதாகவும் மேற்படி திட்டத்தில் சொல்லியிருந்தது.

ஆனால் இந்த உரிமையை மாகாணங்கள் ஆரம்பத்திலேயே (அதாவது இப்போது அரசியல் நிர்ணய சபை கூடும்போதே) உபயோகிக்கலாமா

அல்லது புதுத் திட்டத்தின் கீழ். மாகாண சட்ட சபை ஏற்பட்ட பிறகு தான் உபயோகிக்க வேண்டுமா என்பதுதான் சந்தேகத்திலிருந்த விஷயம். இதைத்தான் பெடரல் கோர்ட்டுக்குத் தெரிவித்துத் தீர்ப்புப் பெறலாம் என்று காங்கிரஸ் சொல்லிற்று.

இப்போது பிரிட்டிஷ் மந்திரிகள் விடுத்துள்ள அறிக்கையில், மாகாணங்கள் மேற்படி உரிமையைப் பிற்பாடுதான் பிரயோகிக்கலாம் என்றும், அதுதான் மே மீ 16உ திட்டத்தை வெளியிட்டபோது தங்கள் உள்ளத்தினுள்ளே இருந்த உத்தேசம் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

அதாவது அஸ்ஸாமும் வங்காளமும் இப்போது திரிசங்கு அரசாங்க ரீதியாகக் கட்டாய விவாகம் செய்து கொள்ளத்தான் வேண்டும். பிற்பாடு இஷ்டப்பட்டால் விவாகரத்து செய்து கொள்ளலாம்.

பஞ்சாப் — சிந்து — எல்லைப்புற மாகாணங்களும் ஆரம்பத்தில் மேற்படி தலைவிதிக்கு உட்பட்டுத்தான் தீர வேண்டும்.

இப்படிச் சொல்லியிருக்கும் பிரிட்டிஷ் மந்திரிகள் அவ்வளவோடு நிறுத்திக் கொண்டார்களா?

அதுதான் இல்லை.

இன்னமும் இது விஷயத்தில் சந்தேகமிருந்தால் பெடரல் கோர்ட்டுக்குத் தெரிவித்தே தீர்த்துக் கொள்ளலாம் என்றும், செய்வதைக் காலாகாலத்தில் தவக்கம் இன்றிச் செய்வது நலம் என்றும் தெரியப்படுத்தியிருக்கிறார்கள்.

“புய்ப்பம் என்றும் சொல்லலாம்; புஸ்ப்பம் என்றும் சொல்லலாம்; வாத்தியார் ஐயா சொல்லிக் கொடுத்த மாதிரியும் சொல்லலாம்!” என்று ஒரு மகா கெட்டிக்காரப் பையன் சொன்னதை மேற்படி பிரிட்டிஷ் மந்திரிகளின் அறிக்கை ஞாபகப் படுத்துகிறது அல்லவா?

மேற்படி எட்டேகால் லட்சணமான பிரிட்டிஷ் சர்க்கார் அறிக்கையை ஜனாப் ஜின்னாவுக்கு வெற்றி என்றோ, காங்கிரஸுக்குத் தோல்வி என்றோ சொல்லுவதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை.

முஸ்லிம் லீக் பிரமுகர்கள் அம்மாதிரி அபிப்பிராயப்பட்டுத் திருப்தியடைவதாயிருக்கும் பட்சத்தில் திவ்யமாகத் திருப்தி அடையட்டும்.

எப்படியாவது மனதைத் திருப்தி செய்து கொண்டு முஸ்லிம் லீக் தலைவர்கள் அரசியல் நிர்ணய சபைக்கு வந்து காலியாகக் கிடக்கும் இடங்களைப் பூர்த்தி செய்தால் நமக்கும் பரிபூரணத் திருப்திதான்.

* * *

தென்னாலிராமன் சாட்சியத்தைப் போல் இரண்டு கட்சிகளுக்கும் பொதுவாக ஏதேனும் ஒன்றைச் சொல்லித் தப்பித்துக் கொள்ளும் நோக்கந்தான் மேற்படி பிரிட்டிஷ் மந்திரிகளின் அறிக்கையில் தெளிவாக வெளியாகிறது.

அதுமட்டுமில்லாமல், ‘இந்தியாவின் அரசியலில் மறுபடியும் தலையிட்டு அதிகாரத்தை விடாமல் வைத்துக் கொள்ளும்’ நோக்கமும் அதில் வெளியாவதாகச் சிலர் கருதுகிறார்கள்.

பிரிட்டிஷாரின் இரத்தத்தில் தலைமுறை தலைமுறையாக ஊறிப்போயிருக்கும் ‘பிரித்தாளும் முறை’ அதில் அடங்கியிருப்பதாகவும் சிலர் நினைக்கிறார்கள்.

இதற்கு ஆதாரமாக மேற்படி அறிக்கையின் கடைசிப் பாராவை அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

“எந்த அரசியல் திட்டத்தையும் தேசத்தில் ஒரு பெரும் பகுதி எதிர்க்குமானால், அதை அந்தப் பகுதியின் பேரில் பலவந்தமாகத் திணிக்க முடியாது” என்று மேற்படி கடைசிப் பாரா கூறுகிறது.

ஆனால், இதுவும் இரண்டு கட்சிகளுக்கும் சாதகமாக வியாக்யானம் செய்ய இடம் கொடுக்கிறதல்லவா?

“அரசியல் நிர்ணய சபை வகுக்கும் திட்டத்தை இஷ்டமில்லாத வங்காளத்தின் மீது திணிக்க முடியாது!” என்று மேற்படி பாராவுக்கு அர்த்தம் செய்யலாம். அதுபோலவே, “வங்காளத்து முஸ்லிம் மெஜாரிட்டி வகுக்கும் திட்டத்தை அஸ்ஸாம் இஷ்டப்படாவிட்டால் அதன் மீது திணிக்க முடியாது!” என்றும் அர்த்தம் செய்யலாம் அல்லவா?

காலக்ஷேபப் பரிசு: சென்ற இதழில் வெளியான காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: எம். எஸ். துரைசாமி, இண்டர்மீடியட் வகுப்பு, நேஷனல் காலேஜ், திருச்சி.

ஏது எப்படியானாலும், யாருடைய நோக்கம் எதுவா யிருந்தாலும் ஒன்று நிச்சயமாகச் சொல்லலாம்.

இந்தியா பூரண சுதந்திரம் அடைவதை இனிமேல் யாராலும் தடுக்க முடியாது. அந்த நோக்கத்துடன் யார் என்ன யுக்தி செய்தாலும் அது ஒருகாலும் பலிக்காது.

பிரித்தாளும் முறையை இனிமேலும் கையாண்டு இந்தியாவில் அதிகாரம் செலுத்தலாம் என்று பிரிட்டிஷார் நினைத்தால் கட்டாயம் ஏமாந்து போவார்கள்.

அரசியல் நிர்ணய சபைக்குப் போகாம லிருப்பதால் சுதந்திரத்துக்கு முட்டுக் கட்டை போடலாம் என்று முஸ்லிம் லீக் தலைவர்கள் நினைத்தால் அவர்களும் ஏமாற்றம் அடைவார்கள்.

இதோ இந்தியாவின் அரசியல் நிர்ணய சபை கூடி ஜாம் ஜாம் என்று நடந்து கொண்டிருக்கிறது. இந்திய மக்களின் உண்மையான பிரதிநிதிகள் இருநூறு பேர் சேர்ந்து இந்திய சுதந்திரத்துக்கு அஸ்திவாரம் அமைக்கத் தொடங்கி விட்டார்கள்.

இந்த அரசியல் நிர்ணய சபையில் அமைக்கப்படும் சுதந்திர அரசியல் திட்டம் அமுலுக்கு வந்தே தீரும். இந்திய மக்கள் நாற்பது கோடி பேரும் அதைத் தாங்கி நிற்பார்கள்.

உலகத்திலுள்ள மற்ற தேசங்களின் மக்களும் அரசாங்கங்களும் மேற்படி அரசியல் நிர்ணய சபைத் திட்டத்தின்படி ஏற்படப் போகும் இந்திய சுதந்திர அரசாங்கத்தை ஒப்புக்கொண்டே தீருவார்கள்.

ஏன்? இப்போதே அன்னிய தேச அரசாங்கங்கள் இந்தியாவைச் சுதந்திர தேசமாக ஒப்புக்கொண்டு காரியம் செய்வதைப் பார்க்கிறோமே?

ஐனுப் ஆஸப் அலியை இந்திய அரசாங்கத் தூதராக அமெரிக்கர் ஏற்க இசைந்திருப்பதும், ஐக்ய தேச சபையில் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் அடைந்திருக்கும் மகத்தான வெற்றியும் இந்தியாவின் சுதந்திரம் ஏற்கெனவே சித்தியாகிவிட்டதென்பதைக் காட்டவில்லையா?

நாற்பது கோடி மக்கள் அரும்பாடு பட்டு அடைந்திருக்கும் சுதந்திரத்தை அவர்களிடமிருந்து அபகரிக்கும் ஆற்றலும் சக்தியும் யாருக்கு உண்டு?

வட்டமேஜை

லீட்ஸ் 12, யார்க்ஸ். இங்கிலாந்து.
22—11—46

ஆசிரியரவர்களே !

பள்ளிக்கூட வயதிலிருந்து எல்லாவற்றையும் ஆங்கிலத்திலேயே படித்துவிட்டதனால் நம்முடைய எண்ணங்களைத் தெரிவிக்க அன்னிய பாஷையின் உதவி வேண்டியிருக்கிறது—"செந்தமிழ் நாட்டில்" பிறந்து வளர்ந்த பிறகுகூட! சென்ற வருஷம் இந்தியாவிலிருக்கும் வரையில் இதைப் பற்றித் நிரயோசித்ததே கிடையாது. இங்கு, ஆறுயிரம் மைல்களுக்கப்பால் வந்த பிறகு, தமிழில் மறுபடியும் பேசுவோமா என்று அங்கலாய்த்துக் கொண்ட பின்புதான், தாய்பாஷையின் பட்டுப் போன்ற புனிதத்தை அறிந்துணர்ந்தேன்.

சாகிற காலத்தில் சங்கரா சங்கரா என்ற மாதிரி, இந்த அவா இங்குதான் வந்து தோன்றி யிருக்கிறது. இங்கு என்னுடன் தமிழ் பேசுவதற்குக்கூட 'அவர்' ஒருவர்தான். அதுவும் நல்ல தமிழில் பேச வராது. மைசூர்க் கன்னடம் கலந்த தமிழில்தான் பேசமுடியும். இங்குள்ள மற்ற 46 இந்தியர்களில் ஒருவர் கூடத் தமிழர் கிடையாது.

அப்படி இருந்தபோதிலும், என் தமிழில் எழுதப் பழக்கப் படுத்திக் கொள்ளக்கூடாது என்றொரு ஆசை தோன்றிற்று. முதலில் மிகவும் சிரமமாக இருந்தது. ஆங்கிலத்தில் உள்ள வார்த்தைகளில் பலவற்றுக்குத் தமிழ் வார்த்தைகளே தோன்றவில்லை. அப்புறம், அந்த வழி தப்பு—ஆங்கிலத்தில் நினைத்து, அதைத் தமிழில் மாற்றுவது மூக்கைத் தொடுவதற்குத் தலையைச் சுற்றிக் கையைக்கொண்டு வருவதுபோல்தா னிருக்கும் — என்றுணர்ந்த பொழுது, தமிழிலேயே நினைத்து எழுத ஆரம்பித்தேன்.

ஒரு அகராதிகூடக் கிடையாது. தமிழில் ஒரு தினசரிப் பத்திரிகையோ, ஒரு வாரப் பத்திரிகையோ கிடையாது. இங்கே "ஹிந்து" பத்திரிகை மட்டும்தான் வரவழைக்கிறோம். வேறு தமிழ் படிப்பது, தாயாரிடமிருந்து வரும் கடிதங்களைப் பார்க்கும்பொழுதுதான்.

அப்படியிருந்தபோதிலும் எண்ணிய கருமத்தைச் செய்து முடிக்க வேண்டும் என்று தீர்மானம் செய்துகொண்டு, சிநேகிதர்களுக்கெல்லாம்—அதாவது தமிழ் தெரிந்தவர்களுக்கெல்லாம்—தமிழிலேயே கடிதம் எழுத ஆரம்பித்தேன். அவர்களுக்கும் முதலில் வேடிக்கையாகவே தோன்றிற்று. ஆனாலும், என்னை விட்டுக் கொடுக்கவில்லை அவர்கள்.


பொருளாதார சாஸ்திரத்தில் க்வீன் மேரியில் பி. ஏ. பட்டம் பெற்றுவிட்டு, இங்கு M. Com. டிகிரிக்குப் படிக்கும் பொழுதிலும், ரஸாயனத்தில் டாக்டர் பட்டம் பெற வேலை செய்யும் 'அவருக்கு' சிச்ருஷை செய்த நாழிகை போக மிச்சமிருக்கும் நாழிகையிலும் உட்கார்ந்துகொண்டு ஏதாவது தமிழில் எழுதுவேன். "ர" விற்கும், "ற" விற்கும் உள்ள வித்தியாசமும் "ஒ","ஓ","ஔ" காரங்களும் முதலில் என் எழுத்துக்களையே குழப்பின...

"சிவகாமியின் சபதம்" முடிந்து விட்டதா? அது தனிப் புத்தகமாக எப்பொழுது வெளி வரும்? இவ் வருஷம் "தீபாவளி மலர்" வெளி வந்ததா? "கல்கி" சிறு கதைப் போட்டி நடந்ததா? சென்ற வருஷம் டிசம்பர் மாதத்திலிருந்து "கல்கி"யைப் பார்க்க முடியவே யில்லை. எங்களிருவருக்கும் மத்திய சர்க்காரிடமிருந்து வரும் உபகாரச் சம்பளத்தில் பல பத்திரிகைகளுக்குச் சந்தா செலுத்தக் கட்டி வருமா என்ற பயம். இருந்தாலும் ஒரு வருஷ சந்தாவாவது "கல்கி"க்கு அனுப்பலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன்.


இப்படிக்கு,
லீலா ஸ்ரீனிவாசன்.

[தங்களுடைய தமிழ்க் கடிதம் வெகு அழகாய் அமைந்திருக்கிறது. ஆறாயிரம் மைல்களுக்கப்பால் இருந்து கொண்டு ஆங்கிலவாடையே இன்றி இத்தகைய அழகான தமிழ்க் கடிதத்தை எழுதியிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. அகராதி கிடைக்காமற் போனதே ஒருவிதத்தில் நல்லதுதான்!

— ஆசிரியர்]



"நீச்சலாடையாய் அவர் அந்தத் துணியைக் கள்ள மார்க்கெட்டில்தான் வாங்கி இருக்கணும்; இல்லாவிட்டால் அவ்வளவு பெரிய துணி இப்போது எப்படிக் கிடைக்கும்?"


J & N REMINDERS!
ஞாபகக் குறிப்பு
வேலையின் வகை: மர இரும்புச் சாமான்களையோ அல்லது கூரைத் தளத்தையோ செவ்வனே பாதுகாக்க அல்லது அலங்கரிக்க வேண்டுமா?
அவசியமாக வேண்டியவை: "ஜில்மில்" (Jhilmil) மரச் சாமான்களுக்கு மினுமினுப் பளிக்கும். கூரைகளுக்குக் "காப்டிக்" (Coptic) இரும்புச் சாமான்களுக்கு "பாரிகோ" (Barico) இவைகளுக்குத் தகுந்த அடிப் பூச்சோடு கூட இவைகளே மிகச் சிலாக்கியமானவை.
Jhilmil
READY MIXED PAINT
BARICO
Coptic
PAINT
JENSON & NICHOLSON
MAKERS OF PAINTS

வானசஞ்சாரம்

இசைத்தேவி

ராகம் நாதநாமக்ரியா என்று சொன்னும் போதே எளிமை, கருணை, சோகம் முதலிய கனிந்த ரஸபாவங்கள் உள்ளத்தில் எழுந்து விடும். உணர்ச்சிப் பெருக்கினை மனதைப் பண்படுத்தும் நல்லிசைகளில் முக்கிய ஸ்தானம் பெற்றது; பண்டைத் தமிழ் இசையில் பண் சீகாமரம். பண் இந்தளம் என்ற பெயர் பூண்டது. பக்த சிரோமணிகள் தெருவிலகப் பாடிப் பரவசமாவதற் கேற்ற கருவியாயும் கள ரூபமாயு மிருந்தது. அதற்குச் சரியான வடநாட்டு ராகம், பைரவ்தாட்டைச் சேர்ந்த காலிங்கடா. இவ் விஷயங்கள் டிசம்பர் 1௳ திருச்சியில் நிகழ்ந்த 'தமது சங்கீதம்' என்ற விமரிசனத்தில் விளக்கப்பட்டன. மேற்படி ராகத்தில் காந்தார மத்யமங்களின் நீர்க்கப் பிரயோகத்திலும் பாவம் பொழிகிறது; மத்யஸ்தாயியிலேயே சஞ்சாரம்; அப்போது நிஷாதம் சற்று கோமளமாய்ப் பிடிக்கப் படுகிறது; மந்தரஸ்தாயி நிஷாதத்துக்குக் கீழ் போவதில்லை என்றெல்லாம் கூறினார் விமரிசகர். தமிழ்ப் பண்முறை சாரங்கபாணிச் செட்டியாராலும், வடநாட்டு முறை துளசிதாஸ் சர்மா, ஹா·லேன்கான் இவர்களின் ஒலிப் பதிவு மூலமாயும் நிரூபிக்கப்பட்டன. தற்காலத் தென்னாட்டு முறையை விளக்கிக் காட்டியவர் பிடில் ராஜமாணிக்கம் பிள்ளை என்றாலே, நிகழ்ச்சியின் வனப்பைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

2௳ திருச்சியில் நிகழ்ந்த மதுரை மணி அய்யரின் கச்சேரியில் ராகங்கள் கத்தரிக்கப் படவில்லை, ஆலாபனைக் கொள்ளாத அவசரங்கள் வரவில்லை, மிதமிஞ்சி ஸ்வரம் பாடப் படவில்லை என்றால் நம்புவீர்களா? ஆம், அவர் மனது வைத்தால் இவைகளில்லாமலும் கற்பனைக்குக் குறைவில்லாமலும் பாட முடியும் என்பதை நிரூபித்ததுதான் சென்ற வாரத்திய விசேஷம். புரோகிராமில் குறிப்பிடத்தக்க பொருத்தம்; ஆலாபனைகளில் கோவையமுது கொண்ட பூரண வடிவம்; உருப்படிகளில் சாகித்யத் தெளிவு; போதிய அளவே ஸ்வரப்ரஸ்தாரம்; இவைகளோடு அன்றையக் கச்சேரி புது மோஸ்தராகவே விளங்கியது. தேவமனோஹரி, ஸுதரங்கி, பைரவி ராகங்கள் நற் சித்திரங்களாய் மிளிர்ந்தன.

• • •

நவம்பர் 26௳ சென்னையில் வி. எஸ். ராஜத்தின் கானம் சிரவ்யமா யிருந்தது. ஷண்முகப்ரியா, கல்யாணி ராகங்களை வெகு தைரியமாய் வழங்கினார்.

27௳ சென்னையில் காளிதாஸ் நீலகண்டய்யரின் பாட்டும், எம். டி. பார்த்தசாரதியின் ஸிம்மேந்திரமத்யம ராகம் தானம் பல்லவிக் கச்சேரியும் ஞானபாவத்தை விளக்கும் நிகழ்ச்சிகளா யிலங்கின.

28௳ திருச்சியிலிருந்து கேட்ட இரு குரல் சேர்ந்த ஒரு கானம் வசீகரமாயும் உயர்தரமாயு மிருந்தது. பாடியவர்கள் நாகம்மா, கமலா. நல்ல தேர்ச்சியும் கற்பனையுங் கொண்டு வழங்கிய பேகடா, ஹிந்தோளம், காம்போதி, பைரவி ராகங்கள் அழகு வடிவங்களா யிருந்தன. உருப்படிகள் ஏராளமான அடுக்கு சங்கதிகளுடன் உருக்கமா யிருந்தன.

29௳ சென்னையில் பந்தமடை சுந்தரய்யர் ஆழ்ந்த ஞானமும் சாதகச் சிறப்பும் கொண்டு, தேவமனோஹரி, ஷண்முகப்ரியா ராகங்களோடு, ருத்ரப்ரியா என்ற அபூர்வ ராகத்தையும் தெளிவாய் வழங்கினார். சஞ்சார சங்கதிகளில் பாவம் நிறைந்திருந்தது.

அன்று திருச்சியிலிருந்து கேட்ட டி. எம். ஹம்ஸவல்லியின் கானம் கவனத்தைக் கவர்ந்தது. சரளமான உருவுபடியுடன் சக்ரவாகம், ஆபோகி ராகங்களையும் உருப்படிகளையும் லாகவமாய்க் கையாண்டார்.

30௳ சென்னையில் எஸ். சோமசுந்தரத்தின் கச்சேரி எதிர்பார்த்ததுக்கு மேல் உற்சாகமா யிருந்தது. அசாத்ய பிர்க்காப் பொழிவு. ஆனால் தேவையில்லாத தெளிவு; நடுவு நடுவே கமக இழைப்புக்கள்; கற்பனைச் சிறப்புடன் உணர்ச்சி யெழுப்பும் பாவம்; எல்லாம் சேர்ந்து மொத்தத்தில் முதல் தரமாய் வாய்த்தது. ஹரிகாம்போதி, உதயரவிசந்திரிகா, கரஹரப்ரியா ராகங்களும் உருப்படிகளும் விருவிருப்பா யிருந்தன.

அன்று அதே நிலையத்தில் ஏ. ஜி. சுந்தரவல்லி, மதுரமும் கனிப்பும் கொண்ட குரலில் சாவேரி, தேவமனோஹரி ராகங்களையும் உருப்படிகளையும் வெகு தெளிவாய் வழங்கினார்.

டிஸம்பர் 1௳ சென்னையில் கோத்தமங்கலம் ஸ்ரீனிவாஸனின் கச்சேரி எதிர்பார்த்தது போல் களைகட்டிருந்தது. அனாயாசமான பிடிகளுடன் ஆங்காங்கே நிதானமாயும், அழுத்தமாயும் சங்கராபரணத்தை விஸ்தாரமாக ஆலாபனை செய்தார். மலயமாருதமும் பிலஹரியும் பிருகா யிருந்தன.

அன்று திருச்சியில் நடந்த திருச்சி என். ஸ்வாமிநாதய்யரின் கச்சேரியைக் கேட்டவர்கள் அவரது ஞானச் சிறப்பையும், முறை வனப்பையும் மெச்சாமலிருக்க முடியாது. சுத்தபங்காளா, ஹம்ஸாநந்தி, ஆனந்த பைரவி, கேதாரகௌளை, பிலஹரி என்று ராகங்களை மாசற்ற நல் வடிவங்களா யிழைத்தார். சாகித்யத் தெளிவும், ஸ்வரப்ரஸ்தாரங்களின் ராக பாவமும் குறிப்பிடத்தக்கவை.

சங்கீதத்தில் நல்ல ஞானம் படைத்தவர்கள் பலர் இருந்த போதிலும், சில வித்வான்கள் தான் கேட்போரை எளிதில் உற்சாகத்தி லாழ்த்தும் வல்லமையும் வழியும் கொண்டிருக்கிறார்கள். பி. எஸ். வேதாசலம் செட்டி அந்த ரகத்தைச் சேர்ந்தவர். 4௳ சென்னையில் கல்யாணியை ராகம் தானம் பல்லவிக்கு எடுத்துக் கொண்டு தன் கை வரிசைகளை யெல்லாம் முடுக்காய்க் காண்பித்தார்.


5௳ சென்னையில் டி. பி. ராஜகோபாலனின் கானம் குறிப்பிடத்தக்கதா யிருந்தது. ரஞ்சனியும் இறுதி ராகமாலிகையும் பாவப் பொழிவுடன் நல் வடிவங்களா யிழைந்தன.

அன்றிரவு திருச்சியில் நடந்த கும்பகோணம் பாநுமதியின் முழு நேரக் கச்சேரி கேட்பதற்குச் சுகமாயிருந்தது. பந்துவராளி, கல்யாணி ஆலாபனைகளும், 'நின்னருள்' என்ற உருப்படியின் நிரவல் ஸ்வரப்ரஸ்தாரங்களும் வசீகரமாயிருந்தன.

லாஹூலில்



செம்மறியாடுகளுக்கும், பிரசித்தி பெற்ற பாஷ்மினா வெள்ளாடுகளுக்கும் செழிப்பான மேய்ச்சல் தரைகளோடு கூடின லாஹூல் மேற்கு திபெட்டுக்கும் வட பஞ்சாபுக்கும் மத்தியிலுள்ள ஓர் மலை நாடு. அது கடல் பரப்பிலிருந்து 10,000 அடிக்குக் குறையாத உயரத்திலிருக்கிறது. மலை நாடானதாலும், கடுமையான சீதோஷ்ண ஸ்திதி காரணமாகவும் நாட்டு மக்கள் அதி திடகாத்திரர்களாக ஏற்பட்டுள்ளார்கள். எனினும் சேர்த்தியான ஆடையாபரணங்களில் ஸ்திரீகளுக்குள்ள அளவு கடந்த ஆசையை அவைகள் மட்டுப்படுத்த முடிகிறதில்லை. பண்டிகை நாட்களில் லாஹூல் ஸ்திரீகள் பச்சை, நீலம், பவளம் முதலிய மாமணி மாலைகளும், வெள்ளி நகைகளும் சற்றேனும் ஐயமின்றி அணிந்து கொள்வதைக் காண வெகு விசித்திரமாகத் தானிருக்கும். சுத்த நெஞ்சம் படைத்தவர்களும் சிநேக பாவம் மிகுந்தவர்களுமாகிய இம் மலைநாட்டாருடன் நமக்கு நெருங்கின தொடர்பு வைத்துக் கொள்வதற்கு ஹிமாலயக் கீழ் தொடர்கள் பெருத்த தடையாயிருக்கின்றன. அப்படியிருந்தபோதிலும் வெகு தொலைவிலுள்ள இக்காட்டிலுள்ளும் ஹமாம் ஸோப்பு எப்படியோ நுழைந்து விட்டது!



A TATA PRODUCT

டாம்கோ விற்பனை இலாகா

19, வாணியர் தெரு

த. பெ. நெ. 31, மதராஸ்

ஹமாம்

பாரத நாட்டு மக்களின் மனத்திற்குப் பிடித்த ஸோப்பு

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்



ரகசியக் கடிதம்

சாவி

டாக்டர் அருக்குணம் வைத்தியத் தொழிலில் ஈடுபட்டு முப்பது வருஷங்களுக்கு மேலாகிவிட்டன.

அருக்குணம் இதற்குள்ளாக எவ்வளவோ கேஸுகளைப் பார்த்திருக்கிறார். எத்தனையோ வியாதிஸ்தர்களைக் கண்டிருக்கிறார். எத்தனையோ புதுப் புது வியாதிகளுக்கு மருந்து கொடுத்திருக்கிறார். எத்தனையோ பேர்களை மோட்ச லோகத்துக்கும் அனுப்பியிருக்கிறார்! ஆனாலும் அன்று காலையில் வந்த அதிசயமான கேஸைப்போல் அவர் முன்பின் கண்டதில்லை. அருக்குணம் அன்று படுக்கையை விட்டு எழுந்திருக்கு முன்பே யாரோ வாசலில் கதவைத் 'தடார், தடார்' என்று தட்டும் சத்தம் கேட்டது. வேறொரு டாக்டராயிருந்தால் அப்படிக் கதவைத் தட்டியவருடைய மண்டையைப் பிளந்து கட்டுப் போட்டு அனுப்பியிருப்பார். ஆனால் அருக்குணத்தின் அருமையான குணங்களில் பொறுமைக் குணம் தலை தூக்கி நின்றது. நிதானமாக எழுந்து போய் வாசல் கதவைத் திறந்தார். வெளியே ஒரு இளம் வாலிபன் நின்று கொண்டிருந்தான். அவன் முகத்திலே பரபரப்பும் பீதியும் காணப்பட்டன.

பார்த்தால் வியாதிக்காரனைப் போல் தோன்றவில்லை. ஆனால் முழங்கை வரை கட்டுப் போட்டுக் கழுத்திலே சேர்த்துக் கட்டி வைத்திருந்தான்.

பார்வைக்கு லட்சணமாயும் பெருந்தன்மையாகவும் செல்வவந்தர் வீட்டுப் பிள்ளையைப் போலும் காணப்பட்டான்.

"யாரப்பா நீ?" என்று கேட்டார் டாக்டர்.

"டாக்டர்! இதோ பாருங்கள்! என் ஊர், பேர் முதலிய விவரங்களைச் சொல்லுவதைக் காட்டிலும் முதலில் என் வியாதியைப் பற்றிச் சொல்லிவிடுகிறேன். அதற்குச் சிகிச்சை செய்த பிறகு என் விவரங்களைச் சாவகாசமாகச் சொல்லிக் கொள்ளலாம். இந்த வலது கையிலே மணிக்கட்டுக்குமேல் எப்போதும் நெருப்பு மாதிரி எரிகிறது. ஆனால் அது என்ன வியாதி என்று மட்டும் தெரியவில்லை. தூங்கி ஒரு வாரம் ஆகிறது; அவஸ்தை பிராணாவஸ்தையா யிருக்கிறது. நிமிஷத்துக்கு நிமிஷம் வலி அதிகமாகிக்கொண்டே போகிறது. இன்னும் அரை மணி நேரத்துக்குள் ஆபரேஷன் செய்யாவிட்டால் என் பாடு ஆபத்தாய் முடியும். தாங்கள் தயவு செய்து



உடனே இதைக் கவனிக்க வேண்டும்" என்றான் வாலிபன்.

டாக்டர் சற்றுத் தயங்கிவிட்டு வாலிபன் கையிலிருந்த கட்டை அவிழ்க்கலானார்.

"டாக்டர் ஸார்! கட்டைப் பிரித்தீர்களானால் ஆச்சரியமாயிருக்கும். காயம் ஒன்றும் கண்ணுக்குத் தெரியாது!" என்று கூறினான் வாலிபன்.

வாலிபன் சொன்னபடி காயம், அடி ஒன்றையுமே காணோம். "எங்கே வலிக்கிறது?" என்று கேட்டார் டாக்டர்.

"மணிக்கட்டுக்கு மேலே!" என்று சொல்லி இடது கை ஆள் காட்டி விரலால் வலிக்கும் இடத்தைக் காட்டினான்.

டாக்டர் அழுத்திப் பார்த்தார்.

வாலிபன் "ஐயோ!" என்று அலறினான்.

"ஒன்றும் தெரியவில்லையே; இடது கையைப் போலத்தானே இருக்கிறது? நரம்பிலும் கோளாறு இல்லை" என்று சொல்லிவிட்டு 'டெம்பரேச'ரைப் பார்த்தார். 'நார்ம'லில்தான் இருந்தது.

ஆனால் வாலிபன் மட்டும் துடித்துக் கொண்டிருந்தான்.

அருக்குணம் பையனுக்கு மூளைக் கோளாறு ஏதாவது இருக்குமோ என்று சந்தேகித்தார்.

இதற்குள் வாலிபன், "ஸார்! என்னைப் பைத்தியக்காரன் என்று எண்ணுகிறீர்கள். என்னால் வாஸ்தவமாகவே வலியைப் பொறுக்க முடியவில்லை. எனக்கு வலி இருப்பது உண்மைதான். சீக்கிரம் ஆபரேஷன் செய்து விடுங்கள்" என்று பல்லைக் கடித்துக் கொண்டு குமுறினான்.

"வியாதி இன்னதென்று பிடிபடாமல் ஆபரேஷன் செய்தால் என்னை யாராவது பைத்தியம் என்று சொல்லுவார்கள்; தாங்கள் போய் வாருங்கள்!" என்று கண்டிப்பாகக் கூறினார் டாக்டர்.

வாலிபன் சட்டைப் பையிலிருந்து பச்சை நோட்டுகளாக ஐந்நூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்து டாக்டரிடம் நீட்டினான்.

அவன் அந்த இடத்தை விட்டுப் போவதாயிருந்தால் டாக்டரே அவனுக்கு ஐந்நூறு ரூபாய் இனாம் தருவதாக இருந்தார். வாலிபன் விடுவதாயில்லை. அருக்குணம் வேறு வழியின்றி அவன் சொன்ன இடத்தில் ஆபரேஷன் செய்து முடித்தார்.

"இப்போது வலி எப்படி இருக்கிறது?" என்று கேட்டார்.

வாலிபன் போன உயிர் திரும்பி வந்தது போல் முகமலர்ச்சியுடன், "வலி அடியோடு போய்விட்டது, ஸார்!" என்றான். டாக்டரால் நம்ப முடியவில்லை. இந்தமாதிரி அபூர்வக் கேஸை அவர் தமது ஆயுளில் பார்த்ததில்லை.

★

ஒரு வாரம் சென்றது. மறுபடியும் அந்த வாலிபன் டாக்டரைத் தேடிக் கொண்டு வந்து சேர்ந்தான்.

"இப்போது எப்படி இருக்கிறது, வலி?" என்று கேட்டார் டாக்டர்.

"மறுபடியும் அதே இடத்தில் முன்னை விட அதிகமாய் வலிக்கிறது. எனவே, இப்போது தாங்கள் செய்ய வேண்டியது இன்னொரு ஆபரேஷன்தான். முன் தடவை மேலோடு செய்து விட்டீர்கள். அதனால்தான் வலி புனர்ஜன்மம் எடுத்து விட்டது. இந்தத் தடவை ஆழச் செய்து விடுங்கள்; குணமாகிவிடும்" என்றான்.

வியாதிஸ்தனே தனக்கு ஆபரேஷன் செய்யும் முறை சொல்லிக் கொடுப்பது

அருக்குணத்துக்கு அவ்வளவாகப் பிடிக்க வில்லை. இருந்தாலும் கோபம் கொள்ளாமல் 'ஆகட்டும்' என்று சொல்லி இரண்டாம் முறையாக வாலிபனுக்குத் திருப்தியாகும் படி ஆபரேஷன் செய்து அனுப்பினர்.

டாக்டரிடம் இந்தத் தடவை வாலிபன் விடை பெற்றுக்கொண்டு போகும்போது சந்தோஷமாகச் செல்லவில்லை; அவன் முகத்திலே ஆழ்ந்த சோகம் காணப்பட்டது.

டாக்டர் இந்த அபூர்வ, அதிசய வியாதியைப் பற்றிப் பல டாக்டர்களிடம் பிரஸ்தாபித்து விவரம் கேட்டார். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பதில் சொன்னார்கள். ஆனால் ஒருவராலும் நிச்சயமாக இன்னதென்று நிர்ணயித்துக் கூற முடியவில்லை. அந்த விதத்தில் அருக்குணத்துக்குத் திருப்திதான். தன்னைவிட எந்த டாக்டரும் கெட்டிக்காரன் அல்ல என்று ஏற்படுகிறதல்லவா?

★

ஒரு மாதம் சென்றது; வாலிபன் திரும்பி வரவில்லை. பல மாதங்கள் கழிந்தன; வாலிபன் வரவே யில்லை. ஆனால் அவனுக்குப் பதிலாக அவனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது.

கவரின்மீது 'ரகசியம்' என்று சிவப்பு மசியில் எழுதி யிருந்தது. அருக்குணம் கவரைப் பிரித்துப் படித்தார். அந்த ரகசியக் கடிதம் வருமாறு:—

"அன்புள்ள டாக்டர் அவர்களுக்கு,

இந்தக் கடிதம் ரொம்பவும் ரகசியமானது. இதை நான் எழுதுவதற்கு முக்கிய காரணம் நம் இரண்டு பேருடைய கவலையும் தீரவேண்டும் என்பதுதான். என்னுடைய வியாதியின் மூலகாரணத்தைத் தாங்கள் தெரிந்து கொண்டால் தங்களுடைய கவலை தீர்ந்து போகும். இரண்டாவதாக வெகு காலமாக என்னுடைய ஹிருதய அந்தரங்கத்தில் அமுங்கிக் கிடந்த ஓர் இரகசியத்தை யாரிடமாவது வெளிப்படுத்தவில்லை என்றால் என் மண்டை வெடித்து விடும்போல் தோன்றுகிறது. ஆகையால், தங்களிடமே அதைச் சொல்லி விடுகிறேன்.

ஆறு மாதத்துக்கு முன்னால் நான் ரொம்பவும் சந்தோஷமான வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்தேன். என்னைவிட உற்சாக புருஷனைத் தாங்கள் அப்போது கண்டிருக்க முடியாது. செல்வத்தில் பிறந்தவனாதலால் எனக்கு எந்தவிதமான குறைவும் இல்லாமல் இருந்தது. ஒரு வருஷத்துக்கு முன்னால் எனக்குக் கலியாணம் ஆயிற்று. அது காதல் மணம். மெடிகல் காலேஜில் வாசித்துக் கொண்டிருந்த ஓர் அழகிய பெண்ணை நான் காதலித்துக் கலியாணம் செய்து கொண்டேன். காதல் என்றால் பரஸ்பரக் காதல் தான். அவளுடன் மற்றொரு பெண்ணும் காலேஜில் வாசித்துக் கொண்டிருந்தாள். இவளும் அவளும் அத்யந்த சிநேகம் பூண்டு இணை பிரியாமல் இருந்து வந்தார்கள். காலேஜுக்குப் போகும்போதும் வரும் போதும் இருவரும் சேர்ந்துதான் போய் வருவார்கள். நான் அவளைக் கலியாணம் செய்துகொண்ட பிறகும்கூட அவர்களுடைய சிநேகம் குறையவில்லை.


ஆறுமாத காலம் எங்களுடைய வாழ்க்கை மிகவும் இன்பகரமாக நடந்தது. அந்த இன்பம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போயிற்று. சமய சந்தர்ப்ப



மதித்து எனக்குப் பிரியமான வார்த்தைகள் பேசி மேலும் மேலும் வாழ்க்கைக்கு மெருகு கொடுத்தாள். அவளுடைய குணத்தைப் பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை. கள்ளங் கபடமற்ற இளங் குழந்தை உள்ளம் படைத்தவளாயிருந்தாள். எனக்காக உயிர்த் தியாகமும் செய்யச் சித்தமாயிருந்தாள். அவளுக்கு உற்றார் உறவினர் யாரும் கிடையாது. இந்தப் பரந்த உலகத்தில் காலேஜில் வாசிக்கும் அவளுடைய தோழியும் நானும்தான் அவளுக்குக் கதி.

நிஷ்கபடமான அவளிடம் சந்தேகத்துக்குரிய ஒரு விஷயமும் இருந்தது. அது வேறு ஒன்றுமில்லை; அடிக்கடி அவள் ஒரு பெட்டிக்குள்ளே எதையோ வைப்பதும், பிறகு அதைப் பத்திரமாகப் பூட்டிச் சாவியைத் தானே வைத்துக் கொள்ளுவதும்தான் அது. எனக்கு இது மிகவும் ஆச்சரியமாயிருந்தது. "அப்படி என்னதான் ரகசியமிருக்கும்?" என்று அறிந்து கொள்ள என் மனம் துடித்தது. ஒரு நாள் அவள் தன் சிநேகிதியைப் பார்க்கச் சென்றிருந்தபோது வாசல் கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு அந்தப் பெட்டியைத் திறக்கப் பல மாறு சாவிகள் போட்டுப் பார்த்ததில் பெட்டி திறந்து கொண்டது. துணிமணிகளுக்கெல்லாம் கீழே பரப்பப்பட்டிருந்த காகிதத்துக்கும் அடியில் அந்த ரகசியம் அகப்பட்டது.

பத்துப் பதினைந்து கடிதங்கள் ஒரு உறையிலேயே போட்டு ரிப்பன் ஒன்றினால் கட்டி வைத்திருந்தது. அவற்றைப் பிரித்துப் பார்க்கத் தொடங்கினேன். ஒவ்வொரு கடிதமும் ஒவ்வொரு தோரணையில் ஆரம்பித்திருந்தது. எல்லாம் காதல் கடிதங்கள். ரகசியக் கடிதங்கள். ஒவ்வொன்றாகப் படித்துக் கொண்டு வரும்போது என் இருதயம் விம்மி வெடித்துவிடும்போல் இருந்தது. தலையிலே யாரோ நெருப்பை அள்ளி அள்ளிப் போடுவது போலும் இருந்தது. எல்லாவற்றையும் படித்து முடித்ததும் அப்படியே பத்திரமாகக் கட்டிப் பழையபடியே வைத்துப் பூட்டிவிட்டேன். சாயந்திரம் அவள் திரும்பி வந்தாள். இருதயத்திலே பொங்கிக் கொண்டிருந்த கோபம் கட்டுக் கடங்காமல் நெருப்புத் தணலாக மாறி வெளியே வந்துவிடும்போல் இருந்தது. அவ்வளவையும் அடக்கிக் கொண்டேன். அந்தக் கபடக்காரி, மோசக்காரி ஒன்றுமே அறியாதவள்போல்



"என்னப்பா, கழுதையை வித்துட்டியாமே, ஏன்?"

"ஆமாங்க; நானும் பையனும்தான் இருக்கோமே? கழுதை வேறெ என்னத்துக்குன்னுதான் வித்துட்டேன். இப்பதான் 'ரேஷன்' வந்தபுறம் துணியே அதிகம் விழுறதில்லிங்களே?"

பச்சைக் குழந்தைமாதிரி கொஞ்சிப் பேசினாள். நானும் என் அந்தரங்கத்தில் அடித்துக் கொண்டிருந்த புயலை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் பேசக் கொடுத்துக் கொண்டிருந்தேன். இரவு சாப்பிட்டு முடிந்ததும் ஏதோ படிப்பதைப் போல் பாவனை செய்து கொண்டிருந்தேன். அவள் படுக்கையில் வந்து படுத்துக் கண்ணயர்ந்தாள். எங்கிருந்தோ வந்த தைரியத்தையும் வலிமையையும் உபயோகித்து அவள் மென்னியைப் பிடித்து அப்படியே திருகி விட்டேன். அப்போதுகூட அவள் வாயைத் திறக்கவில்லை. என்னைப் பரிதாபமாக ஒரு பார்வை பார்த்து விட்டு ஏதோ சொல்ல வாயெடுத்தாள். இதற்குள் அவள் ஜீவன் போய் விட்டது. அவள் தேகத்திலிருந்து தெறித்த ஒரு துளி இரத்தம் என் கை மீது விழுந்தது. இது நடந்து ஆறு மாதங்கள் ஆகிவிட்டன. அவளுக்கு உற்றார் உறவினர் ஒருவருமே கிடையாதாகையால் அவள் மரணத்தைப் பற்றி யாருமே கவலை கொள்ளவில்லை. நானும் மன நிம்மதி யடைந்தேன்.

இந்தச் சம்பவம் நடந்த சமயம் அவளுடைய தோழி ஊருக்குப் போயிருந்தாள். ஆறு மாதம் கழித்துச் சமீபத்தில் தான் திரும்பி வந்தாள். என் மனைவி ஏதோ வியாதி காரணமாக இறந்து போனதாக அவளிடம் கூறிவிட்டேன். அவள் அடைந்த வருத்தம் கொஞ்ச நஞ்சமில்லை. கொஞ்ச நேரம் அழுது புலம்பி



விட்டு அப்படியே ஒரு அதிர் வெடியைத் தூக்கி என் தலைமீது போட்டாள்.

"தங்களிடம் ஒரு ரகசியம் கூறவேண்டும்" என்று அவள் ஆரம்பித்தாள். "என்ன?" என்று ஆவலுடன் கேட்டேன்.

"தங்கள் மனைவியிடம் நான் சில ரகசியக் கடிதங்களைக் கொடுத்து அவளைப் பத்திரமாக வைத்திருக்கும்படி சொல்லி யிருக்கிறேன். அவள் என் அந்தரங்கத் தோழியானதால் அவளிடம் கொடுத்து வைத்தேன். அதெல்லாம் எனக்கு வந்த காதல் கடிதங்கள். என் புருஷனுக்குத் தெரிந்தால் விபரீதமாக முடியும் என்று நினைத்து அவளிடம் கொடுத்து வைத்தேன். அவற்றைத் தயவு செய்து என்னிடம் திருப்பிக் கொடுத்து விடவேண்டும்" என்றாள்.

என் தலை பம்பரத்தைப்போல் சுழன்றது. பாதங்கள் பூமியில் பாவாமல் வழுக்கிக் கொண்டு போயின. இத்தகைய ஒரு பேரிடி என் தலையில் விழும் என்று நான் சொப்பனத்திலும் கருதவில்லை.

டாக்டர்! அன்றுமுதல் நான் படும் அவஸ்தை கொஞ்சநஞ்ச மல்ல.

இந்த விஷயத்தை என் மனைவியின் சிநேகிதியிட மிருந்து கேள்விப்பட்டது முதல் எனக்கு இந்த வியாதி ஆரம்பமாயிற்று. என் மனைவியின் தேகத்திலிருந்து தெறித்த ஒரு துளி ரத்தம் என் மீது பட்டதென்று சொன்னேனல்லவா? அந்த ரத்தத் துளி பட்ட இடத்தில்தான் வலி தாங்காமல் பிராணவஸ்தைப் படுகிறேன். இதுதான் என்னுடைய வியாதிக்கு மூல காரணம். உண்மையில் இந்த வியாதி இன்னும் சொஸ்த மாகவில்லை. இது ஆபரேஷனுக்குச் சொஸ்தமாகக் கூடிய வியாதியுமில்லை. மனப் பிராந்தியின் காரணமாக நீடித்து நிலைத்துவிட்ட அபூர்வ வியாதி இது. இதைப்பற்றி வர்ணிக்க என்னால் இயலவில்லை. சில சமயம் சில பேர்களுக்கு நெற்றிக் கண் இருக்க வேண்டிய இடத்தில் இரண்டு புருவங்களுக்கு மிடையே ஒரு விசித்திரமான வேதனை தோன்றும். அந்த இடத்தில் ஏதோ செய்யும். இதை வியாதி என்று சொல்ல முடியுமா? அந்த மாதிரி ஒரு விசித்திரமான, இனம் கண்டு பிடிக்க முடியாத வியாதிதான் என்னுடையதும். டாக்டர்! எனக்கு நானே அறியாமையினாலும் ஆத்திரத்தினாலும் ஏற்படுத்திக் கொண்ட இந்த அவஸ்தைக்குப் பரிகாரம் உண்டு. அது, ஒன்றுமறியாத அந்த இளம் பெண் இருக்குமிடத்தை நானும் அடைவதுதான். அங்கே போய் அவளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதுதான். அதற்குப் பிறகுதான் என் மனம் நிம்மதி அடையும். வியாதியும் சொஸ்தமாகும். ஆத்மாவும் சாந்தியடையும். டாக்டர்! தாங்கள் செய்த உதவிக்கு ரொம்ப ரொம்ப வந்தனங்கள். விடை பெற்றுக்கொள்கிறேன். இப்படிக்கு,

....

★ ○ ★

உதவி நாடகம்



நாடகத்தில் ஒரு முக்கிய காட்சி

சென்ற (8-12-46) ஞாயிற்றுக் கிழமையன்று சென்னை மியூஸியம் தியேட்டரில் இந்திய மருத்துவக் கல்லூரி மாணவர்கள் "கோமதியின் காதலன்" என்ற நாடகத்தைச் சிறப்பாக நடித்துக் காட்டினார்கள். நாடகத்தின் வசூல் தொகை மேற்படி கல்லூரியில் வாசிக்கும் ஏழை மாணவர்களுக்காக அளிக்கப்பட்டது.

*

[இடமிருந்து:—பிராணநாத்திருநாராயர் : ஜகதீசன் : நாகநாத முதலியார் : குணவான் ஸிங் : மதராஸ் மணி : அஸிஸ்டெண்ட்.]


ஓர் அழகிய நங்கை...

லலிதா! உன்னதப் பதவியிலிருக்கும் [illegible] காரியதரிசி [illegible], [illegible] முன்னணி [illegible] இளைஞரின் மனைவியாகிய இவ்வழகுநங்கை, தனது எழிலைப் பாதுகாக்க, ஆயிரக் கணக்கான [illegible] பெண்மணிகளைப் போல புதிய முறையாகிய பாண்ட்ஸைக் கையாண்டு வருகிறாள்.



கணவனுக்கும் இளமைந்தனுக்கும் லலிதாமீது அளவு கடந்த ப்ரேமை!

....என் வீட்டிலுள்ள எல்லோருந்தான் அவளை உயிருக்குயிராக நேசிக்கிறார்கள்! ஏனெனில் லலிதா தன் யௌவனம் ததும்பிய இயற்கை யழகை பாண்ட்ஸால் காப்பாற்றி வருகிறாள். தினம் காலை, மாலைகளில், அவள் பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம் முகத்திற் பூசி, சொற்பநேரங் கழித்து அதை மெதுவாகத் துடைத்துக் களைகிறாள். தூசும், அழுக்குமெல்லாம் அத்துடனேயே வந்து விடுகிறது! பின்பு பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் தடவுகிறாள். அது சருமத்தினுட்சென்று, உலர்ந்துபோன இயற்கைத்தைலங்களை சருமத்திற்குத் திரும்பியளிக்கிறது. வதனம் பூவிதழ் போன்று மோகனகாந்தியுடன் விளங்குகிறது.....பகல் பூராவும்.....மாலை பூராவும்!



"அம்மா, உன் முகம் எவ்வளவு வழவழப்பாக இருக்கிறது!"



பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம் — தினம் காலை, மாலைகளில் பாண்ட்ஸ் கோல்ட் க்ரீமால் முகத்தைச் சுத்தம் செய்யுங்கள் — சோப்பு வேண்டாம். ஒன்றிரண்டு வாரத்தில் முகசருமம் [illegible].

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் — கோல்ட் க்ரீமைத் துடைத்துக் களைந்ததும், பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் தாராளமாய்ப் பூசிக்கொள்ளுங்கள். அது உலர்ந்துபோன இயற்கைத் தைலங்களை சருமத்திற்கே திரும்பி யளித்து, வதனத்தை மிருதுவும், பளபளப்பு மாக்கிறது. அது கண்ணுக்குப் புலப்படவும் செய்யாது.

பாண்ட்ஸ் பவுடர் — பின்பு வேண்டுமானால், பாண்ட்ஸ் பவுடர் பூசிக்கொள்ளுங்கள் — உங்கள் முகச்சாயலுக்கேற்ற வர்ணமாகத் தேர்ந்தெடுத்து. அது முகத்திற்கு ரோஜா [illegible] போன்றதோர் மோகன காந்தி யளிக்க உதவும்.

பாண்ட்ஸ் க்ரீம்ஸ்

வியாபார விவரங்களுக்கு இவ்விலாசத்திற்கெழுதவும்: எல். ஏ. ஸெய்மூர் & கோ., (இந்தியா) லிட்., பம்பாய் - கல்கத்தா - கராச்சி - சென்னை.

JWT



முடியாத காரியம்

என். என்.

அன்று காலை மணி ஒன்பது இருக்கும். "சண்டிகா சர்க்கஸ் கம்பெனி"யின் மானேஜர் தம் அறையில் உட்கார்ந்திருந்தார். திடீரென்று ஓர் ஆசாமி உள்ளே நுழைந்தான். மானேஜர் அவனை நிமிர்ந்து பார்த்தார். அவரையும் அறியாமல் அவருக்கு ஒரு நிமிஷம் பிரமிப்பும் திகைப்பும் ஏற்பட்டன. தம் ஆயுளில் எவ்வளவோ பயங்கரமான சிங்கங்களையும் புலிகளையும் கண்களில் விரலை விட்டு ஆட்டி வேடிக்கை காண்பித்துள்ள தம்மையே பிரமிக்க வைத்த அந்த ஆசாமியை அவர் கூர்ந்து கவனித்தார்.

கற்பாறை போன்ற அவன் தேகமும், கரடி போன்ற அவன் தலையும், கற்சட்டி போன்ற அவன் மேனியும் பார்க்கவே பயங்கரமாயிருந்தன.

"நீ யாரப்பா? என்ன விசேஷம்?" என்று மானேஜர் கேட்டார்.

"உங்கள் சர்க்கஸ் கம்பெனியில் சேர்த்துக் கொள்வீர்களா என்று கேட்கவே வந்தேன். என்னால் ஒரு பயங்கரமான தீரச் செயல் புரிந்து காட்ட முடியும்!" என்றான் வந்த ஆசாமி.

"என்ன செயல் புரிவாய்?"...... என்று ஆவலுடன் கேட்டார் மானேஜர்.

"நூறு அடி உயரத்திலிருந்து தரையில் தலை கீழாகக் குதிப்பேன்!"

"ஐயோ!...... உன் தலை சுக்கல் சுக்கலாகப் போய்விடுமே!"

"ஹூஹூம்......எனக்குத் தைரியம் இருக்கிறது. வேண்டுமானால் இப்பொழுதே செய்து காட்டுகிறேன், பாருங்கள்!" என்றான் அந்த ஆசாமி.

'சரி' என்று ஒப்புக் கொண்டு மானேஜர் அவனைக் கூட்டிக்கொண்டு வெளியே வந்தார். சர்க்கஸ் கொட்டகையின் உச்சிக்குச் சென்று, அங்கிருந்து அவன் தலை கீழாகப் பூமியை நோக்கிக் குதித்தான்.

மானேஜர், அவனைப் பார்த்து, "சரியப்பா! உன்னை என் சர்க்கஸில் சேர்த்துக் கொள்கிறேன். மாதம் நூறு ரூபாய் சம்பளம் தருகிறேன். சம்மதமா?" என்று கேட்டார்.


"ஹூஹூம்" என்றான் அந்த ஆசாமி.

"சரி, இருநூறு ரூபாய் தருகிறேன். வந்து விடு!"

"ஹூஹூம்..."

"கடைசியாகக் கேட்கிறேன், இருநூற்றைம்பது ரூபாய் தருகிறேன். அதற்குமேல் கொடுக்க என்னால் முடியாது...... ஒப்புக் கொள்ளுகிறாயா?" என்று கேட்டார் மானேஜர்.

அவன் தன் தேகம் முழுவதையும் ஒரு தடவை தடவிக் கொண்டான். விரல்களை மடக்கி நீட்டினான். கழுத்தை இப்படியும் அப்படியும் ஒரு தடவை வளைத்துக் கொண்டான். புருவங்கள் நெரிக்க அவன் மானேஜரைப் பார்த்து, "நீங்கள் ஆயிரம் ரூபாய் கொடுத்தாலும் முடியாது! நான் இந்த மாதிரி குதித்தது **இதுதான் முதல் தடவை!** நான் இப்படிக் குதிப்பது சுலபமாயிருக்கும் என்ற எண்ணத்துடன்தான் இங்கே வந்தேன். ஆனால்...... அடேயப்பா, உடம்பெல்லாம் என்ன வலி வலிக்கிறது! முடியவே முடியாது. இதுமாதிரி அடிக்கடி குதித்தால் உடம்பு என்னத்திற்கு ஆகும்? உங்கள் சர்க்கஸ் கம்பெனியில் எனக்கு வேலையும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம்! நான் போய் வருகிறேன்!" என்று சொல்லிவிட்டு ஓட்டம் பிடித்தான் அந்த ஆசாமி.


மேற்குத் தொடர்ச்சி மலையை யடுத்த கடற்கரைப் பிரதேசங்களில் தேனீர் அருந்துவ தென்பது தொன்று தொட்ட பழக்கம்.
குஜராத்தியர்கள் புத்தம் புதிய தேனீரை ரசிப்பவர்கள். இந்தியாவின் மற்ற பாகங்களைப் போலவே புத்தம் புதிய ப்ரூக்பாண்ட் தேயிலையை அவர்களும் விரும்புகிருர்கள்.
ப்ரூக்பாண்ட்
“இரு இலையும் ஒரு மொட்டும்”



பாம்புக் கோவில்


சின்ன அண்ணாமலை

"நமஸ்காரம், ஸ்வாமிகளே! சௌக்கியமா? எப்பொழுது வந்தீர்கள்? கப்பல் பிரயாணம் சௌகரியமாக இருந்ததா?" என்று என் இல்லத்திற்கு வந்த ஸ்வாமி நிர்மலானந்தாவை வரவேற்றேன்.

"எல்லாம் குருமகாராஜின் அனுக்கிரகத்தால் சௌகரியம்தான். தாங்கள் சௌக்கியந்தானே?" என்றார் ஸ்வாமிஜி.

"எனக்கென்ன ஸ்வாமிஜி? நான்தான் யுத்தத்தில் சிக்காமல் இங்கு வந்து விட்டேனே! தாங்கள்தானே யுத்தத்தின் மத்தியில் அகப்பட்டுக் கொண்டு விட்டீர்கள்? தாங்கள் பிழைத்து வந்ததே என் பாக்கியம்தான்!" என்றேன்.

உடனே ஸ்வாமிஜி ஒரு கடிதத்தை என் கையில் கொடுத்தார். அதை அவசரம் அவசரமாக வாங்கிப் படித்தேன். மேற்படி கடிதம் அழகான தமிழில் மணி மணியாக எழுதப் பட்டிருந்தது. ஒவ்வொரு வரியாகப் படிக்கும்போது என் அடி வயிற்றிலிருந்து துக்கம் கொஞ்சம் கொஞ்சமாக ஏறிக்கொண்டே வந்தது. கடைசியில் "மான் பியாங்" என்ற கையெழுத்தைப் படித்ததும் துக்கம் கண்களுக்கு வந்து கண்ணீராகப் 'பொல பொல' வென்று வெளியே உதிர்ந்தது.



ஸ்வாமி நிர்மலானந்தா, மலாய் தேசத்திலுள்ள பினங்கு நகரத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் மடத்தின் தலைவர். தமிழ் நாட்டுக்காரர்தான். அவருடைய சொந்த ஊர் கவுந்தப்பாடி என்னும் கிராமம். ஸ்வாமிக்குப் பூர்வாசிரமத்தில் முத்துசாமி என்பது நாமதேயம். சென்னையில் பி.ஏ. படித்து விட்டுச் சேவா உணர்ச்சியின் காரணமாக ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்தவர். நல்ல அறிவாளி; குணசாலி; இங்கிதமான பாஷையில் தனிமையாகப் பேசக் கூடியவர். வயது நாற்பது இருக்கலாம். படிப் படியாகத் தம் உயர்ந்த ஒழுக்கத்தால் மேலான பதவிக்கு வந்தவர்.

ஸ்வாமிஜிக்குச் சீனம், மலாய், ஹிந்துஸ்தானி

முதலிய பாஷைகளில் அபார பாண்டித்தியம் உண்டு.

சீனர்கள் சுவாமிஜியை அடிக்கடி புத்தர் கோவில்களுக்கு வந்து உபதேசம் செய்யும்படி வேண்டிக் கொள்ளுவார்கள். இப்படி அவர் அடிக்கடி விஜயம் செய்யும் இடங்களில் 'பாம்புக் கோவில்' என்னும் பிரசித்தி பெற்ற புத்த ஸ்தலமும் ஒன்று.

அப்பொழுது தொழிலின் நிமித்தம் நான் பினாங்கில் வசித்து வந்தேன். பொது வேலைகளில் உள்ள ஆர்வத்தினால் தொழிலில் ஈடுபடுவதைக் காட்டிலும் என் மனம் சேவை செய்வதிலேயே நாட்டங் கொண்டது. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் சுவாமிஜி எனக்கு நெருங்கிய நண்பரானார்!

ஒரு நாள், "இன்று பாம்புக் கோவிலில் பிரசங்கம். போய் வருவோம், வருகிறீர்களா?" என்று சுவாமிஜி என்னைக் கேட்டார். நானும் சந்தோஷத்துடன் ஒப்புக்கொண்டேன்.

பாம்புக் கோவில் மிகவும் அதிசயம் நிறைந்தது என்று நான் ஏற்கெனவே கேள்விப்பட்டிருந்தேன். ஆகையால் கிடைத்த நல்ல சந்தர்ப்பத்தை விடாமல் சுவாமிஜியுடன் மிக்க ஆர்வத்துடன் சென்றேன். வழி நெடுக ரஸ்தாவைத் தவிர மற்ற இடங்களெல்லாம் ஒரே பச்சைப் பசேலென்ற தோற்றமாக இருந்தது. பூத்துக் குலுங்கும் மரங்கள், காய்த்துத் தொங்கும் கனிகள் எல்லாம் எந்த மனிதனின் துன்பத்தையும் போக்கிவிடக் கூடியவையாயிருந்தன. மலாயா பூராவிலுமே இத்தகைய இன்பக் காட்சிகளைக் காணலாம். மேற்படி காட்சிகளை ரசித்துக் கொண்டே நானும் சுவாமிஜியும் பாம்புக் கோவிலை அடைந்தோம்.

கோவில் ஒரு பெரிய திட்டின்மீது அமைந்திருந்தது. ரஸ்தாவிலிருந்து சுமார் முப்பத்திரண்டு படிகள் ஏறியவுடன் பரந்த புல்வெளி தென்பட்டது. அதன் ஓரத்தில் கோவில் அமைக்கப்பட்டிருந்தது. புல்வெளிக்கு வந்தவுடன், "கொஞ்சம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருங்கள்; இதோ வந்துவிடுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே சுவாமிஜி தூரத்தில் தெரிந்த ஒரு வீட்டை நோக்கி நடந்தார். நானும் கோவிலை நோக்கி மெதுவாக நடந்தேன். அச்சமயம் ஏதோ 'சரசர'வென்று என் வேஷ்டியில் உராய்ந்தது. சட்டென்று திகிலுடன் பார்த்தேன். அம்மாடி ஒரு பெரிய பாம்பு என்மீது ஏற முயன்று கொண்டிருந்தது. உடனே ஒரு குதி குதித்துக் காலை உதறினேன். பாம்பு கீழே விழுந்ததும் தன் தலையைத் தூக்கிச் சீறி எழுந்தது. நான் என் காலைத் தூக்கினேன். அதே சமயத்தில் எனக்குச் சற்றுத் தூரத்திலிருந்த ஒரு சீனப் பெண் சத்தம் போட்டுக் கொண்டு ஓடி வந்தாள். நானோ பயத்தினால் என்னை அறியாமல் என் பாதரட்சையினால் அச் சர்ப்பத்தின் தலையை மிதித்து நசுக்கி விட்டேன். பாம்பு ரத்தத்தைக் கக்கிக்கொண்டு இறந்து விட்டது. பாம்பு அடிபட்டு இறந்து கிடப்பதைக் கண்டதும்



அந்தச் சீனப் பெண் ஸ்தம்பித்து விட்டாள். இறந்த சர்ப்பமே மறுபடியும் உயிர்பெற்றுக் கோபத்துடன் சீறுகிறதோ என்னும்படி அவள் தோன்றினாள். திடீரென்று நான் சற்றும் எதிர்பாராத விதமாய்ப் 'படீ'ரென்று ஓங்கி என் கன்னத்தில் அறைந்து விட்டு, என்னைப் பிடித்து அப்பால் தள்ளினாள். நான் தூரப் போய் விழுந்தேன். எனக்கோ ஒன்றும் புரியவில்லை. என் கன்னத்தில் அவளுடைய நான்கு விரல்களும் பதிந்து விட்டன. எரிச்சல் எடுக்க ஆரம்பித்து விட்டது. ஆனால் அவளோ நசுங்கிய பாம்பைக் கையில் எடுத்துத் தடவிக் கொடுத்துக் கொண்டே விம்மி விம்மி அழுதாள். பின்னர் சீன பாஷையில் கூவிக் கூவித் தன் தகப்பனை அழைத்தாள். எங்கிருந்தோ அவளுடைய தகப்பன் பரபரப்புடன் ஓடி வந்தான். அவன் பின்னால் சுவாமிஜியும் ஓடி வந்தார். அந்தச் சீனப் பெண்ணின் தகப்பன் நசுங்கிய பாம்பைப் பார்த்து விட்டுச் சற்றுத் திகைப்படைந்து நின்றான். பிறகு, "யார் இதைக் கொன்றது?" என்று பயங்கரத்வனியில் அதிகாரமாகக் கேட்டான். அந்த இளம் பெண் அழுது கொண்டே என்னைச் சுட்டிக் காண்பித்தாள். ஐயோ! அவனுடைய நெருப்பைக் கக்கும் கண்களைப் பார்க்க எனக்கு மிகவும் பயமாயிருந்தது. தகப்பனையும் மகளையும் சுவாமிஜி தேற்றினார். பின்னர் அவர்களைக் கோவிலுக்கு அழைத்துச் சென்றார். அந்தப் பெண் இறந்து போன பாம்பைக் கையில் எடுத்துக்கொண்டு போனாள். நானும் அவர்கள் பின்னால் நடந்து சென்றேன்.

ஆலயத்துக்குள் பிரவேசித்ததும் என்னையும் அறியாமல் மேலே நோக்கினேன். ஒரு பெரிய பாம்பு தொங்கிக் கொண்டிருந்தது. கீழே பல பாம்புகள் அங்கு மிங்கும் ஓடிக் கொண்டிருந்தன. தூண்களில், கதவுகளில், புத்தர் சிலையில், விளக்குகளில் எங்கே பார்த்தாலும் பாம்பு மயமாகவே இருந்தது. அவைகளில் சில அப் பெண் மீதும் அவள் தகப்பன் மீதும் ஊர்ந்து விளையாடின. எனக்கு ஒரு பக்கம் பயமும் இன்னொரு பக்கம் ஆச்சரியமாகவும் இருந்தது. கடைசியாகப் புத்தர் சிலையை அடைந்தோம். இறந்த சர்ப்பத்தை அந்தச் சிலையின் முன்னால் வைக்கும்படி சுவாமிஜி அப் பெண்ணுக்குக் கட்டளையிட்டார். அவளும் அப்படியே வைத்தாள். பின்னர் மூவரும் சீன முறைப்படி கும்பிட்டார்கள். என்னை அறியாமல் நானும் கும்பிட்டுக் கொண்டிருந்தேன். பின்னர் சுவாமிஜி என்னைக் கோவிலுக்குப் பக்கத்திலிருந்த ஒரு வீட்டுக்கு அழைத்துச் சென்றார். அங்கு போய் எல்லோரும் மௌனமாக ஓர் இடத்தில் உட்கார்ந்தோம்.

"ஏன், அந்தப் பாம்பைக் கொன்றீர்கள்?" என்று சுவாமிஜி திடீரென்று மௌனத்தைக் கலைத்து ஒரு கேள்வியைத் தூக்கிப் போட்டார்.

"கொத்த வரும் பாம்பைக் கொல்லுவது குற்றமா, சுவாமிஜி?" என்று இரக்கத்துடன் கேட்டேன்.

"வாஸ்தவம்தான்; ஆனால் இங்குள்ள பாம்புகள் கொத்தாது என்பது உங்களுக்குத் தெரியாதா?"

"தெரியாதே, சுவாமிஜி! கொத்தாத பாம்பும் உலகத்தில் உண்டோ?"

"தங்களுக்கு இக் கோவிலைப் பற்றிய அதிசய விஷயங்கள் தெரியாது போலிருக்கிறது.



சொல்லுகிறேன் கேளுங்கள் :—

“இந்தப் பெண்ணின் பெயர் வான்மியாக் கியூ. இவர் இவளுடைய தகப்பனார். பெயர் ஹோக்கின் கியான். இந்தக் கோவில் உண்டாகும் காலத்தில் இவர்கள் வம்சத்தின் முதல்வரும் ஒரு பாம்பும் உண்டானதாக ஐதிகம். அந்தப் பாம்பரைதான் இவர்களும் இங்குள்ள பாம்புகளும். பாம்புக் குலத்தில் தோன்றிய இந்த வம்சம் பாம்பரையாகப் பாம்பையே குலதெய்வமாக வழிபட்டு வருகிறது. பாம்புகளுக்கு ஏதேனும் கெடுதல் நேர்ந்தால் இவர்கள் வம்சத்துக்கும் நாட்டுக்கும் தீங்கு நேரிடும் என்பதாக இவர்களிடையே ஓர் ஐதிகம் இருந்து வருகிறது. ஆகையால்தான் இங்குள்ள பாம்புகளை மிக ஜாக்கிரதையாகக் கவனித்துப் பரிபாலித்து வருகின்றனர். இவர்களுடைய வம்சத்தில் இதுவரை நடைபெறாத துர்ச்சம்பவம் இன்று நடைபெற்றதைக் கண்டதும், இந்த மலாய் நாட்டுக்கே ஒரு பெரிய அனர்த்தம் உண்டாகப் போவதின் அறிகுறிதான் இது என்றும், கடவுள் எந்த விதமாகத் தங்களைத் தண்டிப்பாரோ என்றும் அவர்கள் பயந்து கவலைப்படுகிறார்கள்!” என்று சொல்லி முடித்தார்.

என் நெஞ்சம் வருத்தத்தால் துடித்தது. “சுவாமிஜி, இதற்கு நீங்கள்தான் ஒரு வழி செய்ய வேண்டும். நானுக மனமறிந்து ஒரு குற்றமும் செய்யவல்லை” என்று துக்கத்துடன் கூறினேன்.

சுவாமிஜி ஹோக்கின் கியானையும் வான்மியாக் கியூவையும் நோக்கினார். அவர்களுக்குப் பலவிதமான நீதிகளைப் போதித்தார். உயர்ந்த உபதேசங்களைச் செய்தார். “ஏதாவது பரிகாரம் செய்து விட்டால் எல்லாம் சரியாய்ப் போய்விடும்” என்று சமாதானம் கூறினார்.

“வாரத்துக்கொரு தடவை பாம்புக் கோவிலுக்கு வந்து அங்குள்ள பாம்புகளுக்கெல்லாம் பால் ஊற்றி விட்டுக் கடவுளிடம் மன்னிப்புக் கோரவேண்டும்” என்று வான்மியாக் கியூ சொன்ன பரிகார யோசனையை நாங்கள் எல்லோரும் அங்கீகரித்தோம். எதிர்பாராத துர்ச்சம்பவம் காரணமாக சுவாமிஜியின் அன்றையப் பிரசங்கம் தடைப்பட்டுப் போயிற்று. எனவே சுவாமிஜியும் நானும் பிரசங்கத்தை ஒத்தி வைத்து விட்டு புறப்பட்டோம்.

★

வாரா வாரம் பால் ஊற்றுவதன் மூலம் கடவுளிடம் மன்னிப்புப் பெற்று விடலாம் என்பதை நான் நம்பவில்லை யென்றாலும், இனி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பால் வார்க்கும் சாக்கில் அந்த அழகி வான்மியாக் கியூவையும் பார்த்து விட்டு வரலாமல்லவா? ஆகையால் அவளிடம் ஒப்புக் கொண்டபடி பாலுடன் மறு வெள்ளிக்கிழமையே பாம்புக் கோவிலுக்குப் புறப்பட்டேன். கோவிலை அடைந்தவுடன் வெகு ஜாக்கிரதையாகக் காலைக் கீழே ஊன்றிக் கூர்மையாகக் கவனித்துக் கொண்டே நடந்தேன்.

எனக்கு எதிரே வந்த வான்மியாக் கியூ, “என்ன சங்கதி? என்ன பார்க்கிறாய்?” என்று மலாய் பாஷையில் கேட்டாள்.

“ஒன்றுமில்லை; போன வாரம் நடந்தது போல் ஏதாவது நடந்துவிட்டால் என்னுடைய கன்னத்தின் கதி என்ன ஆவது என்று அஞ்சுகிறேன்!’ என்றேன்.

அவள் உடனே ‘கல கல’வென்று சிரித்துவிட்டு, “லூ மான்னா பூசோ!” (நீ ரொம்பப் போக்கிரி) என்றாள்.

பிறகு, புத்த விஹாரத்திற்கு எதிரில் போய் மண்டியிட்டு உட்கார்ந்தேன். அவளும் என் அருகில் உட்கார்ந்தாள். கையில் ஊதுவத்தியை எடுத்துக்கொண்டு இருவரும் கையை ஆட்டி ஆட்டிக் கும்பிட்டோம். அப்போது புத்த பகவானுடைய சாந்தம் தவழும் முகத்தின்மீது ஒரு பெரிய மலைப் பாம்பு ஊர்ந்து கொண்டிருந்தது. நான் அதை அதிசயத்துடன்



பார்த்துக் கொண்டிருந்தேன். அவள் அதைத் தடுத்து என் கைகளைப் பிடித்து மறுபடியும் கும்பிடும்படி செய்தாள். என் கைகளை அவள் பிடித்தவுடன் எனக்கு ஒரு புதிய உணர்ச்சி உண்டாயிற்று. ஆகையால் மற்றுமொரு தடவை அவள் என் கைகளைப் பிடிக்க வேண்டுமென்பதற்காக நான் மறுபடியும் வேடிக்கை பார்ப்பது போல் பாசாங்கு செய்தேன். ஆனால், "சரி, நீ கும்பிட்டது போதும், வா!" என்று அவள் என் கையைப் பிடித்துப் 'பரபர'வென்று இழுத்துக் கொண்டு வெளியே வந்து விட்டாள்!

★

ஒரு வெள்ளிக்கிழமை வந்துவிட்டுப் போய்விட்டால் மறு வெள்ளிக்கிழமை வரை அவளைச் சந்திக்காமலிருப்பது எனக்குப் பெரிய வேதனையாகப் போய் விட்டது. ஆகவே, அவளைத் தினமும் சந்திப்பதற்காக நானாகவே வாண்மியாங் கிழுவுக்கு வலுவில் தமிழ் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்து கொண்டேன். அதற்கு அவளும் சந்தோஷமாக ஒப்புக்கொண்டாள். மறு தினமே பாடம் தொடங்கினேன்.

இப்படியாகத் தினமும் அவளைச் சந்திப்பதும் அவளும் நானும் பக்கத்திலுள்ள அருவிகளுக்கு மாலை வேளைகளில் சென்று குதூகலமாகப் பொழுதைப் போக்குவதும் விளையாட்டு மூலம் தமிழ் மொழியின் இனிமையை அவளுக்குக் கற்றுக் கொடுப்பதுமாக நாட்கள் சந்தோஷமாக ஓடிக் கொண்டிருந்தன.

ஒரு நாள், "நாளைக்குச் சிங்கப்பூர் போக வேண்டிய வேலை ஒன்றிருக்கிறது. போய்விட்டு வருகிறேன். உனக்கு ஏதாவது வாங்கிக் கொண்டு வரட்டுமா?" என்று நான் வாண்மியாங் கிழுவைக் கேட்டேன்.

"சாமான் வாங்குவது இருக்கட்டும். எப்பொழுது திரும்பி வருவீர்கள்?" என்று பதிலுக்குக் கேட்டாள் அவள்.


"ஒரு வாரத்தில் திரும்பி விடுவேன்."

"அப்படியானால் ஒரு வாரம் வரையில் என் ஞாபகமே உங்களுக்கு இருக்காதல்லவா?" என்றாள் அவள் கண்களைச் சிமிட்டிக் கொண்டே.

"இனி நான் எப்படி உன்னை மறக்க முடியும்?" என்றேன்.

"நான் தினந்தோறும் உங்களை எதிர்பார்த்துக் கொண்டே இருப்பேன்!" என்று கூறிவிட்டு, "சந்தோஷமாகப் போய் வாருங்கள்" என்று அவள் என் தலை மறையும் வரை நின்று பார்த்துக்கொண்டே இருந்தாள்.

துரதிர்ஷ்ட வசமாக, நான் சிங்கப்பூர் வந்து சேர்ந்த இரண்டாவது நாளே திடீரென்று ஜப்பான் தாக்குதல் ஆரம்பமாகி விட்டது. இதனால் சிங்கப்பூருக்கும் மற்ற பிரதேசங்களிலுள்ளவர்களுக்கும் சம்பந்தமே இல்லாமல் போய் விட்டது. இந்தியாவைச் சேர்ந்தவர்களில் பலர் அகப்பட்ட கப்பல்களில் ஏறிக்கொண்டு 'குய்யோ முறையோ' என்ற ஓலத்துடன் பயணப்பட்டார்கள். என்னைச் சேர்ந்தவர்களிலும் பலர் புறப்பட்டு விட்டனர். நான் மட்டும் வாண்மியாங் கிழுவை



டிராம் டிரைவர் :—ஏய், ரிக்ஷா! நீ என்ன செவிடா? மணியடிக்கிறது காதிலே விழலே? ஓரம் போப்பா!

ரிக்ஷாக்காரன் :—உன் டிராம் போடற சத்தத்திலே நீ மணியடிக்கிறது எங்கே ஐயா காதிலே விழுது?

விட்டுப் பிரிய மனமின்றித் தவித்துக் கொண்டிருந்தேன்.

இந்தச் சமயத்தில் அன்று மாலை ஒரு கப்பல் இந்தியாவுக்குப் புறப்படத் தயாராக இருந்தது. நண்பர் ஒருவர் தன்னை வழி யனுப்பும் பொருட்டு என்னைக் கப்பல் வரை வரும்படி பலவந்தப் படுத்தினர். நானும் தட்ட முடியாமல் அவருடன் கப்பலுக்குச் சென்றேன். இருவரும் அவருடைய அறையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். திடீரென்று கப்பல் சங்கு ஊதும் சத்தம் கேட்டது. பின்னோடு திடீர் திடீர் என்று குண்டு விழும் சத்தமும் கேட்டது. மேலே 'விர்விர்' என்று ஆகாய விமானங்கள் வட்ட மிட்டன. நான் பரபரப்புடன் கப்பலை விட்டுக் கரைக்கு இறங்கப் படிக்கட்டுக்குச் சென்றேன். ஆனால் என்னைப் போக விடாமல் கப்பல் அதிகாரிகள் தடுத்துவிட்டனர். கப்பலும் புறப்பட்டுவிட்டது.

ஐயோ! எத்தனையோ குண்டுகளை ஜப்பானியர்கள் சமுத்திரத்திலே வீணாகப் போடுகிறார்களே! என் தலையிலே ஒரு குண்டையாவது போடக்கூடாதா?

அந்தத் தலை போகிற சந்தர்ப்பத்தில் கப்பல் அதிகாரிகளிடம் நான் என்ன சொன்னாலும் பயனில்லை என்பதைத் தெரிந்து கொண்டேன். எனவே, நானும் எல்லோருடனும் மணல் மூட்டைகளுக்கு அடியில் படுத்துக் கொண்டேன்.

★

கப்பல் கரை அடைந்ததும், "அப்பா, மகனே! இந்த மட்டிலும் வந்து சேர்ந்தாயே!" என்று என் தாய் தந்தையர் என்னை ஆனந்தத்துடன் வரவேற்றார்கள். என் மனதிலுள்ள துக்கத்தை அவர்கள் எப்படி அறியமுடியும்?

ஒரு நாள், "பினாங்குக்கு அடுத்த பாம்புக் கோவிலில் குண்டு விழுந்து கோவில் கொஞ்சம் சேதப்பட்டது. உயிர்ச் சேதமும் சொற்பம் என்று தெரிகிறது" என்ற செய்தியை ரேடியோ மூலம் கேட்டேன்.

"ஐயோ பாவம்! வான்மியாக் என்ன கதி ஆனளோ? பாம்புக் கோவிலில் வேறு யார் இருக்கப் போகிறார்கள்? அவளும் அவளுடைய தகப்பனும்தானே? ஆகவே, அங்கே உயிர்ச்சேதம் என்றால் அவர்கள் இருவரும்தான் இறந்து போயிருப்பார்கள்!" என்று எண்ணிக் கொண்டேன்.

எப்படியோ வருஷம் ஆறு ஓடிவிட்டது. அணு குண்டின் தயவினால் உலகமகா யுத்தத்துக்கும் ஒரு முடிவு ஏற்பட்டது. யுத்தம் முடிந்த ஒரு மாதத்துக்குப் பிறகு, சுவாமி நிர்மலானந்தா என் இல்லத்திற்கு வந்து மேலே குறிப்பிட்ட கடிதத்தை என்னிடம் கொடுத்தார். என் உள்ளத்தை உருக்கிய அந்தக் கடிதம் வருமாறு:—

அன்பு மிக்க பாபுஜி!

தங்கள் பாத தூளியை வணங்குகிறேன். தாங்கள் எங்கு இருக்கிறீர்கள் என்பதை இன்றுவரை அறியேன். சிங்கப்பூர் சென்ற தாங்கள் என்ன கதியானீர்கள் என்று எனக்கு இன்னும் தெரியவில்லை. இவ்வளவு வருஷமாகத் தங்களைப்பற்றி எங்கெல்லாமோ விசாரித்தாகிவிட்டது. ஆனால் என்னுடைய துரதிர்ஷ்டம் இது வரை ஒரு தகவலும் கிடைக்கவில்லை. இக் கடிதம்கூட உங்கள் கையில் கிடைக்குமோ என்னவோ? தங்களுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருக்குமோ என்று என் நெஞ்சம் அடித்துக்கொண்ட இருக்கிறது. நிச்சயம் தாங்கள் உயிருடன் சௌக்கியமாக இருப்பீர்கள் என்ற திடமான நம்பிக்கை மாத்திரம் எனக்கு இருந்து வருகிறது. தாங்கள் என்னை விட்டுப் பிரிந்த இரண்டாம் நாள் சிங்கப்பூரில் குண்டு விழுந்ததை அறிந்து துடிதுடித்துப் போனேன். 'தாங்கள் சௌகரியமாக என்னிடம் வந்து சேர வேண்டுமே!' என்று புத்த பகவானைப் பிரார்த்தனை செய்யாத நாளே கிடையாது. என் தகப்பனார் இங்கிருந்து சுமார் ஒரு பர்லாங்கு தூரத்தில் விழுந்த குண்டு ஒன்றின் அதிர்ச்சியின் காரணமாக இறந்து விட்டார். நான் தன்னந் தனியனாகி விட்டேன். திடீரென்று இப்படி அனாதையாகி விடுவேன் என்று நான் கனவிலும் நினைத்ததில்லை. அதன் பின்னர் சுவாமிஜியைத் தேடிச் சென்றேன். அதிர்ஷ்டவசமாக அவர் பினாங்கு மடத்தில் அகப்பட்டார். அவர் என்னை மிகவும் பரிவோடு உபசரித்து ஆறுதல் சொன்னார். எனக்காக அவர் பெரும் பிரயத்தனம் எடுத்துத் தங்களை மலாயா பூராவும் விசாரித்தார். தங்களைப் பற்றி ஒரு தகவலும் அவருக்குக் கிடைக்கவில்லை. நான் அவருடைய மடத்திலேயே வாழ்ந்து வருகிறேன். தாங்கள் பாம்பைக் கொன்றதினாலே யுத்தம் வந்ததாக இருந்தாலும், அதனால் என் தந்தை இறந்ததாக இருந்தாலும், நானும் அதே காரணத்தினாலே செத்துப் போவதாக இருந்தாலும்கூட எனக்குக் கவலை யில்லை. தங்களை மறுபடியும் இந்த ஜன்மத்தில் ஒரு முறையாவது பார்த்து விட்டால் அதுவே போதுமானது.

தங்களைக் காண என் கண்கள் துடிக்கின்றன. இதயம் பொங்கி நிற்கிறது.

தங்கள் அடியாள்,
வான் மியாங் இரு.

★

ஆகா! எத்தகைய அன்பு! எவ்வளவு தூய்மையான உள்ளம்! அவளுடைய தமிழ்க் கடிதத்தைக் கண்டதும் என் உள்ளம் குதூகலம் அடைந்தது. எங்கள் அன்புக்கு மத்தியில் பாஷை, மதம், நிறம் ஒன்றும் தடை செய்யவில்லை.

அடுத்த கப்பலிலேயே சுவாமிஜியும் நானும் மலாயாவுக்குப் புறப்பட ஆயத்த மானோம்.

கூடைக்குத் தம்பிடு

பி. ஆர். ராமஸ்வாமி

நித்தியானந்தம் அன்று சீக்கிரம் ஆபீஸுக்குப் போய்விட்டான். தபால்காரனை வழியில் நிறுத்தி நிறுத்தித் தாமதம் செய்பவர்களை மனதில் திட்டிக் கொண்டே அவன் சென்றான். அவனுடைய மனைவி கமலா பங்களூரில் தாயார் வீட்டுக்குப் பிரசவத்துக்காகப் போயிருந்தாள். அவள் தகப்பனாரிடமிருந்து அவளுக்கு ஆண் குழந்தை பிறந்து லேசாய் ஜுரம் கண்டிருப்பதாகக் கடிதம் வந்து இரண்டு நாளாயிற்று. அவளுக்கு உடம்பு எப்படியிருக்கிறதோ, மறுபடி கடிதம் வரவில்லையே என்று ஏக்கமடைந்திருந்தான். ஆகவே, அவன் தபால்காரனை வழி மறிப்பவர்களைத் திட்டினதில் வியப்பில்லையல்லவா?

வீட்டில் வேலை செய்ய ஒரு கிழவிதான் இருந்தாள். அவளுக்குக் கண் பார்வை குறைவோ அல்லது வேலையைக் குறைத்துக் கொள்வதற்காகப் பாசாங்கு செய்தாளோ என்னவோ! கமலா தன் தம்பியுடன் ரயில் ஏறும்போது தன் கணவனிடம் கடைசியில் சொன்னது அவளைப் பற்றித்தான். "நீங்கள் இந்தக் கிழவியை நிறுத்திவிட்டு ஒரு சுறுசுறுப்பான பையனை வைத்துக் கொள்ளுங்கள். ஓட்டலிலிருந்து சாப்பாடு கொண்டு வர, அல்லது தபாலாபீசுக்குப் போகச் சௌகரியமாயிருக்கும். சமயத்துக்கு உதவியாயிருக்கும்" என்று சொல்லிவிட்டுப் போனாள்.



நித்தியானந்தம், "ஆமாம், சமயம் பார்த்துத் திருடவும் செய்வான். கிழவி இவ்வளவு நாளாய் இங்கே வேலை செய்து வருகிறாள். அவளைத் திடீரென்று நிறுத்திவிட்டால் சாப்பாட்டுக்கு என்ன செய்வாள், பாவம்!" என்று சொன்னான்.

"எஜமானிமாருக்களுக்கு வேலைக்காரிகள் மேலே கருணையே கிடையாது. எஜமான்மாருக்களே தேவலே!" என்று கிழவி அடிக்கடி சொல்லுவாள்.

அன்று சாயந்திரம் நித்தியானந்தம் தபால்காரன் ஜன்னல் வழியாக ஏதாவது கடிதம் போட்டிருக்கிறானா என்று தரையைப் பார்த்தான்; ஒன்றும் காணவில்லை.

அடுத்த நாள் காலையில் கிழவி நித்தியானந்தத்துக்கு எதிரில் காகிதக் குப்பைக் கூடையைக் கவிழ்த்து வழக்கம்போல் பரிசோதித்தாள். அப்படிச் செய்கையில், "நான் நேற்றுப் பத்து ரூபாய் நோட்டைக் கீழே போட்டுவிட்டேன்!" என்று கேலி செய்தான் நித்தியானந்தம். கிழவி, "எனக்குக் கண் தெரியவில்லையென்று கேலி செய்கிறீர்களா?" என்று கேட்டுக் கொண்டே ஒரு கடிதத்தை எடுத்துத் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்தாள். நித்தியானந்தம் அது உடைக்காத கடிதமென்று சந்தேகப்பட்டுக் கிழவியிடமிருந்து வாங்கிப் பார்த்தான். அது அவன் எண்ணியபடி ஓர் உடைக்காத கவராய்த்தானிருந்தது. "கிழவி, நேற்று தபால்காரன் போட்டு விட்டுப் போன கடிதத்தை எடுத்துக் கூடையில் போட்டுவிட்டாயா? அம்மா சொன்னபடி உன்னை இனிமேல் இங்கே வேலையில் வைத்திருப்பது உனக்கும் கஷ்டம், எனக்கும் கஷ்டம்தான்போலிருக்கிறதே!" என்று சொல்லி உறையைக் கிழித்துக் கடிதத்தைப் படித்தான். அதில் பின்வருமாறு எழுதியிருந்தது:

"மாப்பிள்ளைக்கு ஆசீர்வாதம்: கமலாவுக்கு ஜுரம் அதிகமாயிருக்கிறது. தந்தி அடித்தாலும் சீக்கிரம் போய்ச் சேருவதில்லையென்றுதான் கடிதம் எழுதுகிறேன். கமலா உன்னைப்

பார்க்க விரும்புகிறாள். ராத்திரி மெயிலிலேயே புறப்பட்டு வரவும்; தவற வேண்டாம்.

அன்புள்ள மாமா,

சுப்பராயன்."

கடிதத்தைப் படித்தவுடன் நித்தியானந்தனுக்குக் கடுங் கோபம் வந்தது. அதை அவன் நேற்றே பார்த்திருக்க வேண்டும். கிழவியிடம் சமாசாரத்தைச் சொல்லி, "இன்று நான் ரயிலுக்குப் போகவேண்டும். நாளை முதல் நீ வேலைக்கு வரவேண்டாம்!" என்று சொன்னான்.



இந்தச் சமயத்தில் வாசலில் பத்திரிகை வந்து விழுந்தது. கிழவி அதைக் கொண்டு வந்து தந்தாள். அதில் ஜோலார்ப்பேட்டைக் கருகில் ரயில் பாதை சேதமடைந்து, ரயில் கவிழ்ந்து, பல பேருக்கு ஆபத்து நேர்ந்த செய்தி கொட்டை எழுத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

அந்தச் செய்தியைப் படித்த நித்தியானந்தம் அன்று முழுவதும் ஒரே ஏக்கமாயிருந்தான். மனைவிக்கு எப்படி இருக்கிறதோ என்று பயப்பட்டான். சாயந்திரம் வீட்டுக்கு வந்ததும் தந்திக்காரன் அவனிடம் ஒரு தந்தியைக் கொடுத்து விட்டுப் போனான்.

"நேற்று புறப்படாதது நல்லதாயிற்று. ஜோலார்ப் பேட்டை ரயில் விபத்தைப் பற்றிப் பத்திரிகையில் படித்தோம். கமலாவுக்குப் பாவாயில்லை. டாக்டர் இனி அபாயமில்லை என்கிறார்" என்று தந்தியில் கண்டிருந்தது.

இந்தச் சமயத்தில் கிழவி பயந்து கொண்டே வீட்டுக்குள் புகுந்தாள். நித்தியானந்தம் பொய்க் கோபத்துடன், "நேற்று வரவேண்டாமென்று சொன்னேனே, ஏன் வந்தாய்?" என்று மிரட்டினான்.

கிழவி, "நேற்று ஏதோ கோபத்தில் சொன்னீர்கள்! இன்று வேண்டாமென்றால் நின்று விடுகிறேன். நான் என்ன செய்வது!" என்று கும்பிட்டு விட்டு வெளியே போகத் திரும்பினாள்.

நித்தியானந்தம் அவளைக் கூப்பிட்டு, "அந்தக் கடிதத்தைத் தபால்காரன் ஜன்னல் வழியாய்ப் போடவே, அது நேரே கூடையில் விழுந்து விட்டது. அதற்கு நீ என்ன செய்வாய்?" என்று சொல்லிப் பணப் பையைத் திறந்து பத்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து அவளிடம் கொடுத்து விட்டு, "வெறும் காகிதம் என்று எறிந்து விடாதே!" என்று சொல்லிப் பிறகு நடந்ததைச் சொன்னான்.


கிழவி நூறு ரூபாய் பெற்றவள் போல் சந்தோஷமடைந்து, "அம்மாளை நான் குழந்தையுடன் சீக்கிரம் பார்க்கவேண்டும்" என்று அவனுடன் சொன்னாள்.

நித்தியானந்தம் தன் மேஜைக்கு அருகிலிருந்த குப்பைக் கூடைக்கு ஒரு பெரிய 'கும்பிடு' போட்டான்.

பழைய காருக்கும்

புதிய காருக்கும்

சிறந்த டயர்



யசோதரா

விச்வம்பரநாத் கௌசிக்

மொழி பெயர்ப்பு ரா. வீழிநாதன்



விரஜகிசோர் சிறிது நேரம் குழந்தையுடன் பொழுது போக்கிய பிறகு, அவனை வேலைக்காரியிடம் விட்டுவிட்டு, "வீட்டில் எல்லாரும் சௌக்கியம்தானே? வேறு ஏதாவது விசேஷமுண்டா?" என்று ராமநாத பாபுவைக் கேட்டார்.

"எல்லாரும் சௌக்கியமே!" என்றார் ராமநாதபாபு.

"ஆமாம், சந்திரபுரத்துச் சமாசாரம் ஏதாவது தெரியுமோ?"

இதைக் கேட்டதும் ராமநாத பாபுவின் முகம் வாடிவிட்டது. "என் அப்பா, பழைய குப்பையைக் கிளறுகிறாய்?" என்று கேட்டார்.

விரஜகிசோர் புன்முறுவலுடன், "இதென்ன, அவர்களைப் பற்றிய சமாசாரம் ஏதாவது தெரியுமா என்று கேட்டால்......!" என்று ஆரம்பித்தார்.

"என் மனதைப் புண்படுத்துவதில் உனக்கு ஏன் இவ்வளவு ஆனந்தம்? எல்லாம் உன்னால் வந்த வினைதானே?"

"என்னால் வந்த வினையா!"

"ஆமாம், உன் சொல்லைக் கேட்டுத்தானே என் மனம் கல்லாகி விட்டது?"

"நானா உன்னை அவளுக்குக் கடிதம் கூட எழுத வேண்டாம் என்று சொன்னேன்? எடுத்ததற்கெல்லாம் என் மேல் குற்றம் குறை கூறுவதே உன் வேலையாகி விட்டதே!"

"போதும், போதும். அந்தப் பேச்சை விட்டுத் தள்ளு! வேறு ஏதாவது பேசு. அந்தப் பேச்சைப் பேசினாலே என் மனதை என்னவோ செய்கிறது!"

"மனதை என்னவோ செய்வானேன்? நீதான் எல்லாவற்றையும் மறந்து மூட்டை கட்டி வைத்து விட்டாயே! அப்புறம் என்ன?"

"ஆறிப் போன காயத்தில் நகம் பட்டு விட்டால் மறுபடியும் புண்ணாகிவிடுகிறதல்லவா? அதே போல......"

"அதெல்லாம் கிடக்கட்டும், அப்பா! நான் சொன்னபடியே நடந்து விட்டது, பார்! நான் உன்னைத் தெரிந்து கொண்டிருக்கிற அளவு கூட நீ உன்னைத் தெரிந்து கொண்டிருக்கவில்லை. நீயாவது, ஜுல்லோவைக் கல்யாணம் செய்து கொள்ளவாவது? எனக்கு அப்பொழுதே தெரியும்......!"

"போதுமே, இந்தப் பேச்சு!"

"ஜுல்லோ உன்னைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாளோ, யார் கண்டது?"

"அவளுடைய காதலை உதறித் தள்ளிய என்னைப் பற்றி அவள் என்ன எண்ணிக் கொண்டால்தான் என்ன?"

"என்னவோ, அப்பா! நடந்த வரையில் எல்லாம் நன்மைக்கேதான் நடந்தது!"

"அது கிடக்கட்டும்; சினிமா ஒன்பதரை மணிக்குத்தானே ஆரம்பமாகிறது?" என்று பேச்சை மாற்றும் எண்ணத்தில் கேட்டார் ராமநாதபாபு.

"ஆமாம்" என்றார் விரஜகிசோர்.

"இங்கிருந்து ஒன்பதே கால் மணிக்குப் புறப்பட்டால் போதுமோ, இல்லையோ?"

"ஓ! போதுமே!"

"சரி, வா! உள்ளே போய் உட்காரலாம்" என்று கூறியவாறே எழுந்தார் ராமநாத பாபு.

* * *

இருவரும் அறையில் போய் அமர்ந்தனர். சிறிது நேரத்துக்கெல்லாம் ஹரநாத் வங்கி, அன்று சாயந்திரம் வந்த தபால்களைக் கொண்டு வந்து ராமநாத பாபுவின் மேஜை மேல் வைத்தான். ராமநாத பாபு தபால்களை எடுத்துப் படிக்கலானார். விரஜகிசோர், அந்தத் தபால்களுடன் வந்திருந்த 'லீடர்' பத்திரிகையை எடுத்துப் படிக்க ஆரம்பித்தார். அடுத்த நிமிஷம் "அடே!" என்ற ஆச்சரியச் சொல் அவரையும் அறியாமல் அவருடைய வாயிலிருந்து வந்தது.



கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்த ராமநாதபாபு தலையை நிமிர்த்தி, "என்ன? ஏதாவது விசேஷ சமாசாரம் உண்டோ?" என்று கேட்டார்.

"ஆமாம், அப்பா!"

"படி, பார்க்கலாம்!"

விரஜகிசோர் அந்தச் செய்தியைப் படித்தார்:—

ஜமீன்தாரும் அவருடைய பெண்ணும் செய்த இணையற்ற தியாகம்!

தங்கள் நிலபுலன்களைக் குடியானவர்களுக்கே அளித்து விட்டனர்!

சந்திரபுரி......

"அலகாபாத் ஜில்லாவில் உள்ள சந்திரபுரம் என்ற கிராமத்துப் பிரசித்தி பெற்ற ஜமீன்தார் அர்ஜுன் சிங்கின் குமாரர் சுந்தரராம் சிங்கும், அவருடைய விவாகமாகாத பெண் குமாரி யசோதாராவும், தங்களுடைய இரண்டு லக்ஷ ரூபாய்க்கு மேல் பெறுமான மூன்ன நிலபுலன்களை ஏழைக் குடியானவர்களுக்கே அளித்துவிட்டனர். குமாரி யசோதரா தன் வீட்டில் இருந்த விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களை யெல்லாம் ஏழைப் பெண்களின் கல்யாணத்திற்கென்று நன்கொடையாக அளித்து விட்டாள். இதைத் தவிர சந்திரபுரத்தில் ஒரு பள்ளிக்கூடமும் அனாதை விடுதியும் கட்டுவதற்காக ஐம்பதினாயிரம் ரூபாய் வேறு அளித்திருக்கின்றனர்."

அவ்வளவுதான்; ராமநாத பாபு, அந்தப் பத்திரிகையை விரஜகிசோரின் கையிலிருந்து 'வெடுக்', கென்று பிடுங்கிக் கொண்டு அதே செய்தியை நான்கைந்து தடவை படித்தார். விரஜகிசோர் பேசாமல் ராமநாத பாபுவின் முகத்தில் மாறி மாறித் தோன்றும் பாவத்தைக் கவனித்துக் கொண்டிருந்தார். ராமநாத பாபு பத்திரிகையை மேஜையின் மீது வைத்துவிட்டு விரஜகிசோரைப் பார்த்து, "என்ன ஆச்சரியம்!" என்றார்.

"ஆமாம், ஆச்சரியமாகத்தானிருக்கிறது!"

"இன்னும் ஜஸ்லோ கல்யாணமே செய்து கொள்ளவில்லை போலிருக்கிறதே!"

"இல்லாமலென்ன! ஒரு சாதாரணமான காட்டுப்புறத்துப் பெண் படித்தவனான உன்னைத் தோற்கடித்து விட்டாள்!"

"ஆமாம், உன்னைப் போன்ற சிநேகிதர்கள் எனக்கு வாய்த்திருக்கும்பொழுது யாரால்தான் என்னைத் தோற்கடிக்க முடியாது?" என்றார் ராமநாதபாபு.

"நான் என் கடமையைச் செய்தேன்......!" என்றார் விரஜகிசோர்.

ராமநாத பாபு விரஜகிசோரின் சொல்லுக்குச் செவி சாய்க்காமல், "இனிமேல் என்னால் முடியவே முடியாது!" என்றார்.

"என்ன முடியாது என்கிறாய்?"

"இந்தச் சம்பவத்தைத்தான் சொல்கிறேன். ஜஸ்லோ வேறு யாரையாவது கல்யாணம் செய்து கொண்டிருந்தால் ஒரு வேளை மறந்து விடலாம். அவள் கல்யாணம் செய்து கொள்ளாமல் இருக்கும் பொழுது நான் எப்படி அவளை மறக்க முடியும்?"

விரஜகிசோர், சந்தேகமும் அவநம்பிக்கையும் தொனிக்கும் குரலில், "ஆமாம், யசோதரா இப்படிச் செய்வாள் என்று நான் நினைக்கவே இல்லை. உண்மையிலேயே அவள் இந்த மகத்தான தியாகத்தைச் செய்திருப்பாளாகில், மறக்க முடியாத சம்பவம்தான் இது!" என்றார்.

ராமநாதபாபு அவருடைய பேச்சைக் காதில் வாங்கிக் கொள்ளாமலேயே, "அவள் ஆரம்பத்திலும் பிச்சைக்காரியாயிருந்தாள்; கடைசியிலும் அதே பிச்சைக்காரியாகி விட்டாள்!" என்று சொன்னார்.

"'கடைசியிலும்' என்று சொல்லாதே! அவள் என்ன, இதற்குள் கிழவியாகி விட்டாளா? தெய்வ சித்தம் இருந்தால்......" என்று ஆரம்பித்தார் விரஜகிசோர்.

"சரி, சரி!" என்று சொல்லி விட்டு, ராமநாத பாபு மௌனமாக யோசனை செய்யலானார்.

மணி எட்டு அடித்தது. ராமநாதபாபு தூக்கத்திலிருந்து எழுந்தவர் போல, "விரஜகிசோர், நீ சாப்பிட எழுந்திரு! எனக்கென்னவோ, இன்று பசியே இல்லை!" என்றார்.

"என்ன, ராமநாத்! எடுத்ததற்கெல்லாம் மனதை அலட்டிக் கொள்கிறாயே!"

"எனக்கு ஜஸ்லோவின் சமாசாரத்தை நினைத்தால்......!"

"திருப்பித் திருப்பி இதென்ன ராமநாத்! எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை. எழுந்திரு, சாப்பிடப் போவோம்!" என்று விரஜகிசோர் கடுமையாகச் சொன்னதும், ராமநாத பாபு சாப்பிட எழுந்தார்.

* * *

இந்தச் சம்பவம் நிகழ்ந்த மூன்று மாதங்களுக்குப் பிறகு விரஜகிசோரும் ராமநாத பாபுவும் மசூரி போகும் வழியில் இரண்டு நாட்கள் ஹரித்துவாரத்தில் தங்கினர்.

அன்று காலை இருவரும் கங்கா ஸ்நானம் செய்து விட்டு, சிறிது நேரம் பிளாட்பாரத்தில் உலாவிக் கொண்டிருந்தனர். அப்போது ஒரு ஸ்திரீ அந்த வழியே வருவ



தைக் கண்ட ராமநாத பாபு, சற்று நின்று அவளைக் கவனித்தார். உடனே, "என்ன! ஜஸ்லோவா? எங்கே இப்படி?" என்று கேட்டார்.

யசோதரா அவரை ஏற இறங்க உற்றுப் பார்த்துவிட்டுப் புன் முறுவலுடன், "ராமநாத பாபுவா? நீங்கள் எங்கே இப்படி?" என்று கேட்டாள்.

"மசூரி போகிறேன்; வழியில் இரண்டு நாள் இங்கே தங்கினேன்."

"ஓஹோ! வீட்டில் எல்லாரும் சௌக்கியந்தானே?"

"எல்லாரும் சௌக்கியந்தான். பத்திரிகையிலே உன்னைப் பற்றிப் படித்தேன். அதென்ன, உனக்கு அப்படித் தோன்றிற்று?"

யசோதரா சிரித்துக் கொண்டே, "அப்படித் தோன்றியதில் தப்பு ஒன்றும் இல்லையே!" என்றாள்.

"......நீ செய்தது போல யாராலுமே செய்ய முடியாது; மனமும் வராது...!"

யசோதரா மறுபடியும் சிரித்துக் கொண்டே, "என்னைப் போன்ற நிலைமையில் யாராயிருந்தாலும் அப்படித்தான் செய்திருப்பார்கள்!" என்றாள்.

ராமநாதபாபு பதில் பேசாமல், யசோதராவின் முகத்தையே உற்று நோக்கியவாறு நின்றார். விரஜகிசோரும் அவருக்குப் பக்கத்திலேயே நின்று கொண்டிருந்தார்.

"சுந்தராம் எங்கே இருக்கிறான்?"

"சத்திரத்தில்."

"எந்தச் சத்திரத்தில்?"

யசோதரா அந்தச் சத்திரத்தின் பெயரைச் சொன்னாள்.

"சரி, நான் மத்தியானம் அவனைப் பார்க்க வருகிறேன்."

"கட்டாயம் வாருங்கள்!"

"இன்னும் இங்கே எவ்வளவு நாள் இருப்பதாக உத்தேசம்?"

"பிச்சைக்காரர்களுக்கு ஒரு நிலை ஏது? இன்று இங்கே! நாளைக்கு எங்கேயோ? கடவுளுக்குத்தான் தெரியும்!"

"ராணியாக இருக்கவேண்டிய உனக்கு இந்தப் பிச்சைப் பிழைப்பு ஏன் பிடித்ததோ?"

"நானா ராணி? எனக்கு நினைவு தெரிந்ததுமுதல் நான் பிச்சைக்காரியாகத்தான் இருக்கிறேன். நடுவில் சிறிது காலம் என்னுடைய நிலைமை மறந்து இருந்து விட்டேன். சுய அறிவு பெற்றதும் அதே பிச்சைக்காரியாகி விட்டேன்! என் தலையில் பிச்சைக்காரியாக இருக்கவேண்டும் என்று கடவுள் எழுதியிருக்கும் பொழுது, நான் எப்படி ராணியாக முடியும்?"

ராமநாதபாபு தன்னை மறந்து பேசாமல் நின்றார்.

யசோதரா மேலே நடந்தவாறு, "வீட்டில் எல்லாருக்கும் என் நமஸ்காரத்தைத் தெரிவியுங்கள்!" என்று சொன்னாள்.

அவள் நகருவதைக் கண்ட ராமநாதபாபு, "ஜஸ்லோ! நீ சாதாரண ஸ்திரீயில்லை, தெய்வம்!" என்றார்.

யசோதரா அவரைத் திரும்பிப் பார்த்துச் சிரித்தவாறு, "நானா தெய்வம்? நான் தெய்வமாயிருந்தால் கோயிலில் இருக்க மாட்டேனா? என்னை வழிபடுவதற்கும் ஒரு பூசாரி இருக்கமாட்டானா?" என்றாள்.

"என் உள்ளம் உன்னை எப்பொழுதுமே வழிபடும், ஜஸ்லோ!"

"நம்பிக்கையும் சிரத்தையும் இல்லாத உள்ளத்தினால் பூஜை செய்து என்ன பிரயோஜனம்? — மனிதன் எங்கேயாவது தெய்வமாக முடியுமா?" என்று சொல்லி விட்டு யசோதரா சிரித்தவாறே நகர்ந்தாள்.

ராமநாதபாபு வருத்தமே உருவெடுத்தவராய் நின்று அவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். விரஜகிசோர் அவருடைய தோளைப் பிடித்து உலுக்கி, "வா அப்பா, என்ன பார்க்கிறாய்?" என்றார்.

ராமநாதபாபு ஒரு நீண்ட பெரு மூச்சு விட்டுவிட்டு மேலே நடக்கலானார்.

விரஜகிசோர், "என்ன, ராமநாத்! மத்தியானம் சுந்தராமைப் பார்க்கச் சத்திரத்துக்குப் போகிறாயா?" என்று கேட்டார்.

"இல்லை; நேரே மசூரிக்குப் போக வேண்டியதுதான்!"

"ஏன்?"

"இந்தக் குறுக்குக் கேள்வி யெல்லாம் என்னைக் கேட்க வேண்டாம், விரஜகிசோர்! இன்றே இப்பொழுதே புறப்பட வேண்டியதுதான்!" என்று கூறி ராமநாதபாபு வேகமாக நடந்தார்.

விரஜகிசோரும் அவருக்குப் பின்னாலேயே சென்றார். காலை ஒன்பது மணி வண்டியில் இருவரும் மசூரி போகும் வண்டியில் ஏறி உட்கார்ந்து விட்டனர்.

முற்றிற்று



இன்னும் சில
மீரத்
காட்சிகள்





விளம்பர விவாகம்

ஸோமாஸ்

"அம்மா, பார்வதி! இந்த விளம்பரத்தைப் பார்த்தாயா?" என்று கேட்டுக் கொண்டே கையில் பத்திரிகையுடன் சுந்தரம் கூடத்துக்கு வந்தான்.

"என்ன அண்ணா?" என்று கேட்டுக் கொண்டே பார்வதி பூங்கொடி போல் அசைந்து வந்தாள்.

"பையன் பீ.ஏ. பாஸ் செய்திருக்கிறான். தாயார் தகப்பனார் இல்லையாம். சொத்து இருக்கிறது. 'கையிலே காலிலே' ஒன்றும் வேண்டாமாம். பெண் நன்றாய் இருந்தால் போதுமாம். போட்டோ அனுப்பச் சொல்லி விளம்பரம் செய்திருக்கிறான்!" என்றான் சுந்தரம்.

அதற்குப் பார்வதியிடமிருந்து பதில் ஒன்றும் வரவில்லை. சோகம் கலந்த பெருமூச்சு ஒன்று வந்தது.

"புதிதாக ஒரு போட்டோ எடுத்து அனுப்புவோமே! நம்ம ஸ்வாமி ஸ்டுடியோவுக்குப் போனால் நன்றாக எடுத்துத் தருவான். முன்புகூட அவன்தானே எடுத்தான்!" என்றான் சுந்தரம்.

பார்வதி தழுதழுத்த குரலில், "அண்ணா, எனக்கு என்னவோ போட்டோ எடுத்துக் கொள்ளவே பிடிக்கவில்லை. இதுவரையில் எத்தனையோ படம் எடுத்தாயிற்று. பல பேருக்கு அனுப்பியும் ஆயிற்று!........." என்று கூறும்போதே பார்வதியின் கண்களில் நீர் துளித்தது.

"அசடு, இதற்கெல்லாம் அழுவாளோ? எல்லாம் வேளை வந்தால் தன்னாலே ஆகிறது. கவலைப்படாதே! போய் 'டிரஸ்' செய்துகொண்டு வா, போட்டோ எடுத்து வரப்போகலாம்!" என்று சுந்தரம் அன்பு ததும்பும் குரலில் அவளைத் தேற்றினான்.

* * *

பார்வதி சுந்தரத்தின் ஒரே தங்கை. சுந்தரத்துக்குத் தன் அருமைத் தங்கை பார்வதியை எங்கேயாவது ஒரு நல்ல இடத்தில் விவாகம் செய்து வைத்துவிட வேண்டும் என்று ஆசை. அதற்காக அவன் தேடாத இடமெல்லாம் வரன் தேடிப் பார்த்து விட்டான். ஒன்றும் சரிப்பட்டு வரவில்லை. அதற்குப் பிறகுதான் இந்த விவாக விளம்பர வேட்டையில் இறங்கினான் சுந்தரம்.

* * *

"நீங்கள் கொஞ்சம் புன்சிரிப்புடன் இருக்க வேண்டும்!" என்று போட்டோகிராபர் சொன்னதும் பார்வதி வெட்கத்தினால் தலைகுனிந்து கொண்டாள்.

"என்ன, பார்வதி! இப்படித் தலையைக் குனிந்து கொண்டால் அவர் எப்படிப் படம் எடுப்பார்? உம்......நிமிர்ந்து நன்றாய்க் காமிராவைப் பார்த்துக்கொண்டு நில்!" என்று சுந்தரம் கொஞ்சம் கடிந்து கொண்டான்.

"கல்யாணத்தின்போதுதான் தலையைக் குனிந்துகொண்டு உட்காரப் போகிறீர்களே? அதற்கு இப்பொழுதிலிருந்தே என்ன அவசரம்?" என்று போட்டோகிராபர் கூறியதும் 'களுக்' என்று சிரித்து விட்டாள், பார்வதி.

"ரொம்பச் சிரித்தாலும் படம் சரியாய் விழாது. புன்சிரிப்போடு இருக்க வேண்டும்" என்று கூறிவிட்டு அவன் காமிராவைச் சரிப்படுத்த ஆரம்பித்தான்.

பார்வதி நாணம் கலந்த புன்னகையுடன் 'காமிரா'வைப் பார்த்தாள். 'கிளிக்' என்னும் சத்தம் கேட்டதும் பார்வதி எழுந்தாள்.

சுந்தரம், பார்வதியின் போட்டோவை அந்த வரனுக்கு அனுப்பினான். நான்கு நாட்களுக்கெல்லாம் பதிலும் வந்தது. பெண் பிடித்திருப்பதாகவும் மாப்பிள்ளைப் பையனை டாக்டர் பரிக்ஷைக்குப் படிக்க வைத்தால் விவாகத்துக்குச் சம்மதிப்பதாகவும் எழுதியிருந்தது.

சுந்தரம் அதைக் கண்டதும் பார்வதியின் விவாகப் பேச்சிலேயே அசிரத்தை கொண்டு விட்டான். இந்தச் சமயத்தில்தான் அந்த விவாக விளம்பரம் அவன் கண்ணைக் கவர்ந்தது.

"மணமகள் தேவை

வியாபாரத் துறையில் முன்னணியில் நிற்கும் ஒரு அழகிய வாலிபனுக்குக் கவர்ச்சிகரமான மணமகள் தேவை. வரதக்ஷிணை

அவசியமில்லை. மேற்காணும் விலாசத்தில் நேரில் காணவும். சிவஸ்வாமி,

நெ. 8, நடுத் தெரு, சென்னை. 4."

இந்த விளம்பரம் சுந்தரத்துக்கு மிகவும் திருப்தியை யளித்தது.

"பார்வதி, இன்று ஞாயிற்றுக்கிழமை. ஆகையினால் இன்றைக்கே இந்த விலாசத்துக்குப் போய்ப் பார்த்து வருவோம். நாலு காலத்துக்கு முன்பு புறப்பட வேண்டும். நாலு மணிக்கெல்லாம் அங்கே இருக்க வேண்டும்!" என்றான் சுந்தரம்.

பார்வதி "ஊம்" என்று அசிரத்தையாகக் கூறித் தலையசைத்தாள்.

* * *

சுந்தரத்துக்கு இந்த வரனாவது நிச்சயமாக வேண்டுமே என்று ஒரே கவலையாயிருந்தது. வரதட்சிணை வேண்டாம் என்று விளம்பரம் செய்திருப்பதிலிருந்து பையன் நல்ல ஸ்திதியில் இருப்பவன் என்று ஊகிக்க முடிந்தது. பெண் அவன் மனசுக்குப் பிடித்து விட்டால் போதும். ஆனால்...... அவனைப் பார்வதிக்குப் பிடித்திருக்க வேண்டுமே! பையன் எப்படி யிருப்பானோ? வயது ஆனவனாக இருந்தால்......? மறுத்து விட வேண்டியதுதான்.

இப்படியெல்லாம் சிந்தனை செய்து கொண்டே சுந்தரம் பார்வதியை அழைத்துக் கொண்டு அந்த விலாசத்துக்குப் போய்ச் சேர்ந்தான்.

சுந்தரம் அங்கே போனதும் விலாசத்தை ஒரு முறை பார்த்துக் கொண்டான். அங்கேயிருந்த வேலைக்காரனைப் பார்த்து, "சிவஸ்வாமி என்பவர் இங்கேதானே இருக்கிறார்?" என்று கேட்டான்.

"ஆமாங்க!" என்று கூறிவிட்டு, அவன் சுந்தரத்தையும் பார்வதியையும் மாடி ஹாலுக்கு அழைத்துக் கொண்டுபோனான்.

சுந்தரம் அங்கே போனதும் ஆச்சரியத்தினால் ஸ்தம்பித்து விட்டான். அவனுக்கு ஒன்றுமே பேசத் தோன்றவில்லை. பார்வதியும் ஆச்சரிய பரவசமானாள்.

"வாருங்கள், வாருங்கள்! உட்காருங்கள். என்ன சமாசாரம்?" என்று சிரித்துக் கொண்டே சிவஸ்வாமி அவர்களை எதிர்கொண்டு வரவேற்றான்.

"இந்த விளம்பரம் செய்தது நீங்கள்தானே?" என்று கேட்டுக் கொண்டே சந்தோஷமும் வியப்பும் கலந்த பார்வையுடன், சுந்தரம் பத்திரிகையில் வந்த விளம்பரத்தை அவனிடம் காட்டினான்.

"இன்னும் உங்களுக்குச் சந்தேகம் தீரவில்லையா? நான்தான் சிவஸ்வாமி! விளம்பரம் செய்தவனும் நான்தான்! நேரில் இது விஷயமாய்ப் பேசுவதை விட விளம்பரத்தின் மூலம் பேசுவது சுலபம் என்று எனக்குப் பட்டது. அதனால்தான் இப்படிச் செய்தேன்!" என்றான் சிவஸ்வாமி.

"உங்கள் முழுப் பெயர் சிவஸ்வாமியா? ஸ்வாமி ஸ்டுடியோ என்னும் பெயரிலிருந்து உங்கள் பெயரை என்னால் இதுவரை தெரிந்து கொள்ளவே முடியவில்லை!" என்றான் சுந்தரம்.

"அது கிடக்கட்டும். உங்கள் தங்கை என்ன சொல்லுகிறாள்? கேட்டீர்களா?" என்று கேட்டு விட்டு, சிவஸ்வாமி அர்த்தம் கலந்த பார்வையைப் பார்வதியின் மீது செலுத்தினான்.

பார்வதி மட்டும் சும்மா இருந்துவிடவில்லை. பதிலுக்குச் சிவஸ்வாமியை நாணம் கலந்த ஒரு பார்வை பார்த்துவிட்டுத் தலை குனிந்து கொண்டாள்.

ஆனால், அதற்கு அடுத்த வாரமே கல்யாணம் செய்துகொண்ட சிவஸ்வாமியையும் பார்வதியையும் மணக் கோலத்தில் படமெடுக்க வேறொரு போட்டோகிராபரைத் தான் வரவழைக்க வேண்டியிருந்தது!

காலக்ஷேபம்

கடும் வார்த்தை!

"முன்பு வேலை பார்த்து வந்த இடத்தை நீ ஏன் விட்டு விட்டாய்?"

"அது ஒன்றுமில்லைங்க! அந்த எஜமான் ஒரு வார்த்தை சொன்னாருங்க. மனசுக்குக் கஷ்டமா யிருந்தது. வேலையை விட்டு நின்று விட்டேனுங்க."

"அது என்ன வார்த்தை?"

"வேலையை விட்டு நின்றுவிடு என்று சொல்லிவிட்டாருங்க!"

சபாஷ்!

சுந்தரம்:—அம்மா, நான் கொட்டாங்கச்சியில் ஒரு தம்பூரா செய்திருக்கிறேன், பார்த்தாயா? இதோ வாசிக்கிறேன், கேள்!

அம்மாள் (ஆச்சரியத்துடன்):—அடேடே! நன்றாயிருக்கிறதே! உன் தம்பூராவுக்குத் தந்தி எப்படிக் கிடைத்தது?

சுந்தரம்:—உன்னுடைய வீணைத் தந்திகளைத்தான் பிரித்து எடுத்துக் கொண்டேன்!

சரிதான்!

மாஜிஸ்டிரேட்:—உமக்கு இந்தக் குற்றவாளியை நன்றாய்த் தெரியுமா?

சாட்சி:—எனக்கு இந்த ஆசாமியை இருபது வருஷங்களாகத் தெரியும்.

மாஜிஸ்டிரேட்:—இவர் எப்போதாவது பொதுஜன அமைதிக்குப் பங்கம் விளைவித்தது உண்டா?

சாட்சி:—உண்டு; இவர் பாண்டு வாத்தியக் கோஷ்டியைச் சேர்ந்தவர்!

கவலை யில்லை!

வீடு பார்க்க வந்தவர்:—இந்த வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் ஒரு பாட்டு வாத்தியார் குடியிருக்கிறாராமே, ரொம்பத் தொந்தரவா யிருக்குமே!

வீட்டுக்காரர்:—அதெல்லாம் உங்களுக்கு ஒரு தொந்தரவும் இருக்காது. அவருக்கு நாலைந்து குழந்தைகள் இருக்கின்றன. அவை போடும் சத்தத்தில் பாட்டு வாத்தியாரின் பாட்டு உங்கள் காதில் விழாது!

ரொம்ப சுலபம்!

"ஸார், என்ன எழுதுகிறீர்கள்? ஓய்வு ஒழிவு இல்லாமல் விழுந்து விழுந்து எழுதுகிறீர்களே?"

"ஒரு நாவல் எழுதிக் கொண்டிருக்கிறேன், ஸார்! நூதனக் கருத்துக்களைப் புகுத்த வேண்டி விருப்பதால் மிகவும் ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டிருக்கிறேன்!"

"என்னத்துக்காக இவ்வளவு சிரமப்படுகிறீர்கள்? இரண்டு ரூபாய்க்கு நாவல் கிடைக்குமே! எத்தனையோ நாவல்கள் புதிது புதிதாகப் பிரசுரமாகி யிருக்கின்றனவே!"

இன்னும் பேசலாம்!

பிரசங்கி (வெகு நேரம் பேசியபின்):—சபையோர்களே, நான் உங்களை அதிக நேரம் உட்கார வைத்ததற்காக வருந்துகிறேன். இதோ இரண்டு நிமிஷங்களில் முடிந்து விடுகிறேன்.

சபையோர் (ஒரு முகமாக):—அதனால் பாதகம் இல்லை; நீங்கள் பேசுங்கள். மழை கடுமையாக இருப்பதனாலே இப்போது வெளியே போவதற்கில்லை.

நல்ல யோசனை!

பையன்:—அம்மா, அடுத்தாத்து சல்லடை பிய்ந்து போய்விட்டதோ, இல்லையோ? அதற்காக அந்த அம்மாமி உன்னைத் திட்டுகிறாள்!



அம்மா:—சரி, இனிமேல் அந்தத் தரித்திரத்தின் வீட்டுக்குப் போய்ச் சல்லடை கேட்காதே! கோடியாத்து ருக்மணி அம்மாமியைக் கேட்டு வாங்கிக் கொண்டு வா!




சிறுமிகளுக்கு—உஸ்! உன்மிகவும் அழகான பொம்மை தூங்குகிறது. அதைப் பார்த்தால் நிஜக் குழந்தையைப் போலல்லவா இருக்கிறது. ஓ! உன் கைகளைப்பார். அவைகளை லைப்பாய் சோப்பால் சுத்தப்படுத்த வேண்டும். இதுவும் உன் விளையாட்டில் ஒரு பாகந்தான். ஏனென்றால், நிஜமான, பெரிய, சிறிய குழந்தையை ஜாக்கிரதையாக காப்பாற்ற எல்லா வஸ்துக்களையும் கொஞ்சமும் அழுக்கில்லாமல் சுத்தமாக வைத்துக் கொள்வதுதான் முக்கியமென்று பெரியவர்களுக்குத் தெரியும். லைப்பாய் சுத்தம்செய்து கிருமிகளையும், தூசிகளையும் போக்க, ஒருபொழுதும் மறக்காதே. அவ்வாறு நீ செய்தால் உன் தாயாருக்கு மிகவும் ஆநந்தம் அளிக்கும். ஆகையால் விளையாட்டை லைப்பாயால் சுத்தம் செய்வதோடு முடி. சாப்பாட்டிற்கு முன்னும் கூட சுத்தம் செய்ய மறக்காதே. "நான் ஏன் லைப்பாய் சோப்பை உபயோகிக்கிறேன்?"

என்ற கேள்விக்கு உங்களுக்கு தோன்றும் பதிலை Dept. B212 P.O. Box 758, Bombay, என்ற விலாசத்திற்கு எழுதுங்கள். உன்னத விடைக்கு மாதமொரு முறை ஒரு பரிசு அளிக்கப்படும்.

பெற்றோர்களே! உங்கள் குழந்தைகள் வீட்டிலோ, பள்ளிக்கூடங்களிலோ, தெருக்களிலோ, எங்கு விளையாடினாலும், விஷக்கிருமிகள் கொண்ட அழுக்கின் அபாயத்திற்குள்ளாவார்கள் என்று உங்களுக்குத் தெரியும். குறைந்தது 27 வித நோய்களுக்கு அழுக்கும் தூசியும்தான் காரணம் என்று டாக்டர்கள் சொல்லுகிறார்கள். அழுக்கிலுள்ள கிருமிகளை ஒழிக்க மிகவும் சுலபமானதும், சுகமுமான வழி என்னவென்றால் லைப்பாயினால் நன்றாயும், ஒழுங்காயும் சுத்தம் செய்வதுதான்.

லைப்பாய் ஒரு நல்ல சோப்பைக் காட்டிலும் சிறந்தது. அது ஒரு நல்ல பழக்கம்



L. 85-23-40 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED



குழந்தைகள் பராமரிப்பைப் பற்றிய சிறிய புத்தகம் 4 அணாவுக்கு ஸ்டாம்புகள் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் பெயரையும் விலாசத்தையும் எச். ஜே. பாஸ்டர் & கோ. லிட்., த. பெ. 202, பம்பாய் என்ற விலாசத்திற்கு அனுப்புங்கள்.



Edited, Printed and Published by R. Krishnamurthy at The "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk Madras

கல்கி



ALKI டிஸம்பர் 15, 1946 4 அணா

மிட்லண்ட் ஸினிமா

50, ஜெனரல் பாட்டர்ஸ் ரோட்

PHONE: 86048

★

ஸ்ரீ A. K ராமச்சந்திரனவர்கள் முன்னின்று நடத்துவது

தினசரி 2 காட்சிகள் மாலை 3-30, 6-30 மணிக்கு
சனி, ஞாயிறு பிரத்யேகக் காக்ஷிகள் இரவு 9 30

நாளை டிசம்பர் 14உ ஒரு வருஷம் பூர்த்தியாகிறது

★

இவ்வளவு நாட்களாக எங்களுக்கு நல்ல ஆதரவு அளித்து வந்த ஸினிமா ரஸிகர்களுக்கு எங்கள் மனமார்ந்த வந்தனம். இனியும் அவர்களது நல்லாதரவையும், நல்லாசியையும் நாடுகின்றோம்.

★

இவ்வருஷம் நாங்கள் வெள்ளித் திரைக்குக் கொண்டு வரும் ஒவ்வொரு படமும் உங்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு விடுமென்பது நிச்சயம்.

★

ஸினிமா உலகில் பிரபலமாக விளங்கும் அநேக நடிக நக்ஷத்திரங்களில் முக்கியமாக YVONNE SALOME DECARLO; OLIVIA DEHAVILLAND; JOAN FONTAINE; GINGER ROGERS; MERLE OBERON; RONALD COLMAN; DOUGLAS FAIRBANKS JR. ABBOTT COSTELLO; HENRY FONDA; GEORGE BRENT; PAUL LUKAS; முதலியவர்கள் நடித்த உன்னதப் படங்கள் வெளிவரும் நன்னாட்களை எதிர்பாருங்கள்.

இப்பொழுது நடைபெறுகிறது: **CANYON PASSAGE** (In Technicolor)

REGD. NO. M. 4392



மதராஸ் ஸிடி ஏஜண்ட்ஸ்: சக்தி டிரேடிங் கம்பெனி
581, பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ்